REGD M 4642

தா விபரம்
—
ண்டு ரூ 7,
, 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 11—9—49 | இதழ் 11

## ★ மாஜிகடவுள்கள் ★
4.



## ★ ஓடின் ★

# மாஜி கடவுள்கள்

[ சி. என். ஏ. ]

ஒற்றைக்கண் தேவன் ஓடின், ஓர் மூலதெய்வம். பன்னெடுங்காலம் பக்திமான்களின் பூஜையைப் பெற்றுக்கொண்டு பரந்தாமனாக விளங்கி வந்தவன்; பராக்கிரமமிகுந்த ஓடின் பல தீரச்செயல்கள் புரிந்து, இகம், பரம் இரண்டிலும் ஏகசக்ராதிபத்யம் செலுத்திவந்தான். ஓடின் புகழ், பாசுரமாக்கப்பட்டு, செயல்கள், திருவிளையாடற் புராணமாக்கப்பட்டு, பாமரரும் புலவரும், அரசனும் ஆண்டியும், ஒரு சேரக் கொண்டாடக்கூடிய விதமான தேவனாகப் பல காலம் விளங்கியவன், இந்தஓடின்.

ஜெர்மனி, அதை அடுத்துள்ள நாடுகள், பிரிட்டன், ஆகிய பல நாடுகளிலே, ஓடின், தேவதேவனாகப் பூஜிக்கப்பட்டு வந்தான். சிவனாருக்குக் கைலாயமும் விஷ்ணுவுக்கு வைகுந்தமும், குறிப்பிடப்படுவது போல, இந்தத் தேவனுக்கு, பழங்கால, டியூடானிக்மக்கள், ஆஸ்கார்ட் எனும், இடத்தைக் குறிப்பிட்டிருந்தனர்.

வைகுந்தமாவது கைலாயமாவது, அதெல்லாம், மனப்பிராந்தி, மதவாதிகளிலே மட்டரகமானவர்களின் கற்பனை, பித்துப்பிள்ளை விளையாட்டு என்று, இன்று ஒருசிலரால் கூற முடிந்தபோதிலும்கூட, பாமரர்களில் பெரும்பாலோர், கைலாயம் என்பது உண்மையாகவே இருப்பதாகவும், அங்கு ஒரு புறத்தில சிவ—சக்தி நடனம் நடந்து கொண்டிருப்பது போலவும், மற்றோர்புறத்திலே முருகனின் மயில், தன்கலாபத்தை விரித்தாடுவதை, தினைப்புனத்தழகி திருமதி வள்ளி அம்மையார் கண்டுகளிப்படைவது போலவும், ஆறுமுகங்களிலே, ஒரு முகத்தால் ஐயன் சிங்காரவேலன், இக்காட்சியைக்கண்டு ஆனந்திப்பது போலவும், தம்பிக்கு இந்தச் சுவைதான் தெரியுமே தவிர, 'அப்பம் அவல்பொறி' இவைகளின் ருசி என்ன தெரிகிறது என்று எண்ணியபடி, 'மூஷிகவாகனன்' ஓர் புறம் இருப்பது போலவும், நம்பிக்கொண்டுதானே இருக்கிறார்கள். மறுத்துப்பாருங்கள், பாமரரின் கோபம் எப்படிக்கிளம்புகிறது என்பது தெரியும்! இப்பொய்யுரைகளையே கொண்ட புராணங்களை, கிருபானந்தர்கள் கீதக்குரலிலே எடுத்துரைக்கும்போது, மன்னார் சாமிகள், மகிழ்வதைப் பாருங்கள்! மதி குழம்பியிருந்தபோது, தெளிவற்றவர்கள், கட்டிவிட்ட இத்தகைய பொய், இயல், இசை, நாடகமாகி, இன்றளவு வரையிலே, மக்கள் மன்றத்திலே, உலவமுடிகிறது.

சிலர் அறிவர், இவைஎல்லாம் எத்தரின் கருவிகள் என்று. எனினும் எடுத்து இயம்பமாட்டார்கள், ஏமாளிகளின் கோபம் தம்மைத்தாக்குமே என்ற அச்சத்தால்

அறிந்தோர் அச்சத்தால் அடங்கிக்கிடக்க, பாமரர், பழைய குட்டையிலேயே ஊறிக்கிடக்கும் நிலை காண்கிறோம் நம் நாட்டில்.

இந்நிலை, சரிதகாலத்துக்குமுன்பு, டியூடானியர்களிடையே இருந்தது. அப்போது அரசோச்சிய மூலதெய்வந்தான், ஓடின்! அறிவு கிளம்புமட்டும், ஈடு இணையற்றவனாக விளங்கி வந்தான், விண்ணுலகில்.

ஆஸ்கார்டில், அதிஅற்புதமான சக்திவாய்ந்த ஓடின், தேவிமார், தம்பிமார்கள், குமாரர்கள், குட்டிக்கடவுளர்கள் ஆகியோர் புடைசூழக் கொலுவீற்றிருந்து, அண்டர் நாயகனாக ஆட்சிசெய்து வந்தான். அவன் ஆணைப்படி நடக்கவேண்டும் அனைவரும் — மீறுபவர் படுபாதாளத்திலே தள்ளப்படுவர்! அவன் சொல்லை ஏற்கவேண்டும் சட்டமாக, மீறினோர் அழிக்கப்படுவர். அவன் விருப்பத்தின்படியே விண்ணும் மண்ணும் விளங்கவேண்டும். அவ்வளவு பலம், ஓடினுக்கு!

ஆஸ்கார்டிலே, ஓடின் ஓர் உயரமான, உன்னதமான ஆசனத்தில் அமர்ந்திருப்பான்! ஒற்றைக்கண்தான் இருந்தது, எனினும், எங்கு என்ன நடைபெறினும், அவனால் கண்ட[illegible] முடியும்.

தங்கச்சிம்மாசனத்தின்மீது வீ[illegible] றிருக்கும் இந்தத் தனிப்பெருங்க[illegible] வுள், நீலநிறத் தலைப்பாகையு[illegible] மேகவர்ணப்பட்டாடையு[illegible] அணிந்து கொண்டு, கெம்பீரமா[illegible] காணப்படுவான். நல்லஉயரம், அத[illegible] கேற்ற காத்திரம்! கண்மட்டுந்தா[illegible] ஒன்று!!

டியூடானிக் ஆண்டவன் இ[illegible] வண்ணம், அலங்கார ரூபனாக வீ[illegible] றிருக்கும்போது, அவன் தோளின் மீது, இருபுறத்திலும், இரண்[illegible] அண்டங் காக்கைகள் உட்கார்ந்[illegible] கொண்டிருக்கும்! காலடியிலே[illegible] இரண்டு, ஓநாய்கள் படுத்துக் கிட[illegible] கும்! கருடன் மகாவிஷ்ணுவுக்கும்[illegible] காளை சிவனாருக்கும், உண்ட[illegible] லவா!!

இந்த இரு அண்டங் காக்கைகள் அவ்வப்போது கிளம்பிப் போய் பல இடங்களிலும் நடைபெறுவன வற்றைக் கண்டறிந்து வந்து ஓ[illegible] னுக்கு உரைக்குமாம்—அதனாலேயே ஓடின் இருக்குமிடத்திலிருந்தே எங்கும் நடைபெறும், சேதியை அறிந்துகொள்ளும் 'சக்தி' பெ[illegible] முடிந்தது.

இரு அண்டங் காக்கைகளிலே ஒன்றின் பெயர், 'சிந்தனை'—ம[illegible] றொன்றின் பெயர், 'நினைவு'!

ஓநாய்களிலே ஒன்றின் பெயர், 'பேராசை'—மற்றொன்றின் பெயர், 'பெருந் திண்டி.'

இந்தப் பரிவாரங்களுடன் வீற்றிருந்த வண்ணம், அண்டத்தைப் பரிபாலித்து வந்தான், இந்த அதி[illegible] சயத் தேவன்.

இன்று ஜெர்மனியில், பெர்லின் நகரிலோ, இங்கிலாந்தில் இலண்டன் நகரிலோ, சென்று, ஓடின் தேவனின் ஆலயம் எங்குளது, என்று கேட்டால் கைகொட்டிச் சிரிப்பர், ஓய்[illegible] வுடையோர்; பிறர், அதையும் செய்[illegible]

# ஆண்டவனும் அண்டங்காக்கையும்

! ஓடின், ஓர் மாஜி கடவுள்! றிவு பிறந்ததும், இந்தத் தேவன் ந்தான்! பகுத்தறிவு கிளம்பி ம், இந்தப் பகவான் மறைந்தார்! ரும் இன்று நம்புவதில்லை, படிப்பட்ட தேவனை!

எனினும் ஓர் காலத்திலே கவி ணர் பாட, புவியாள்வோர் ணிக்கையைக் கொட்ட, பூஜாரிகள் ர்ச்சிக்க, பாமரர் பயபக்தியுடன் தொழுது நிற்க, சர்வசக்தி வாய்ந் ராக, ஓடின், தேவாலயங்களிலே ற்றிருந்தார்.

அண்டங் காக்கை இரண்
டுடையாய் போற்றி!
அமரர் நாயகனே, அதி
பலதேவா போற்றி!
நீலப்பாகை உடையாய்
போற்றி!
ஒற்றைக் கண்ணு! ஓடின்!
போற்றி!

று தோத்திரம் செய்துகொண்டு ன் வந்தனர்.

ஒற்றைக்கண்ணன்! முக்கண்ணன் றியும் நமது புராணீகர்களுக்கு டானியப் புராணீகன், தான் ருஷ்டித்த கற்பனைக் கடவுளுக்கு, ரு கண்தான் வைத்தான்—மற் றன்றை இழக்கச் செய்தான்.

ஓடின், தேவனுகி, தேஜோன்மய க விளங்குவதற்காக 'தேவரசம்' க விரும்பினுன். இந்தத் தேவ த்தைத் தயாரித்துக் கொண்டிருந் ர்கள், நிபந்தனை விதித்தனர், னுக்கு. என்ன நிபந்தனைக்கும் சைவேன், எனக்கு மட்டும், தேவ ம் தருக, என்று கேட்டாராம் ன்.

உறுதி, கலங்காத தன்மை, தியாக ள்ளம், இவை உண்டா என்று சோதிக்க விரும்பிய, தேவரசம் ாரிப்போர், "உன் கண்களிலே ன்றைப் பிடுங்கி இந்தக் கிணற் லே எறியச் சம்மதமா?" என்று ட்க, ஓடின், உடனே தன் இரு ண்களிலொன்றை எடுத்து எறிந்து ட்டு, தேவரசம் பெற்றுப் பருகி, தவனுனன்!

கடவுள், ஆகிறன், கடவுள்! எப் டி இருக்கிறது, கடவுட் கொள்கை! நம்பக்கூடியதாக இல்லையே, என்பர் —ஆமாம், இன்று—! அன்று? வேதம், இது! தேவனின் திருவிளை யாடல் இது! ஆத்தீகம், இதை நம்புவதுதான்!

ஆச்சரியமாக இருக்கிறதா? கட வுள், தேவரசம் பருகித்தானு கட வுட் தன்மை பெற்ருர்! என்பது கேட்டு!

வேறுநாட்டு விவகாரம் இது, ஆகவே, வேகமாகக் கண்டிக்கக் கூடத்தோன்றும். இப்படிக்கூடவா, காட்டுமிராண்டித்தனமாக இருந்து வந்தனர், என்று கேலி பேசத் தோன்றும். இந்த நிலையில், டியூடன் மக்கள், இருந்தது, எப்போது? உல கப்பொது அறிவு ஏற்படாமுன்னம்! சிலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்துவந்த சிந்தனைக் குழப்பம்! இது, கேலிக்குரியதாகத் தோன்று கிறது இப்போது. எனினும், இதே சிந்தனைக்குழப்பம், இன்றும் இங்கு இருக்கிறதே இதற்கு என்ன சொல் கிறீர்கள்! இதைப்போக்க என்ன செய்தீர்கள்? செய்பவர்களுக்குத் தரும் சிறப்பு என்ன? நாத்திகன், என்ற வசை!!

தேவரசம் தேடினுன் தேவன் என் பது வேடிக்கை என்று கூறத்தோன் றும், டியூடன் தேவன் கதையைப் படிக்கும்போது. ஆனுல் இப்போ தும், நம்நாட்டுமக்கள் படிக்கிறுர்கள் —படிக்கப்பக்கம் நின்றுகேட்டுநெஞ் சம் நெக்குருக நிற்கிறுர்களே. புரா ணங்களே! அவைகளிலே ஒன்று, கூர் மாவதாரமல்லவா! பகவான், ஆமை யாகி, திருப்பாற்கடலிலே, மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக்கயிறு ஆகவும் கொண்டு கடைந்து, 'அமிர்தம்' பெற முயற் சித்தபோது, மேரு, கடலுக்குள்ளே மூழ்கிவிடாதிருக்க, பகவான், ஆமை யாகி, மலையைத்தாங்கிக் கொண்ட கதைதானே, கூர்மாவதாரம், இதை, இன்றும் நம்புகிறனே, நமது உடன் பிறந்தவன்! மறுத்துப் பேசுபவன், மாபாவி என்று ஏசப்படுகிறனே! இதற்கென்ன சொல்கிறீர்கள்.

தேவரசம் பருகிட ஒற்றைக்கண் ணனுன ஓடினை, ஓடின் தேவனுகக் கொண்டாடப்பட்டுவந்த நாட்டு மக் களெல்லாம், மறந்து பல ஆயிரம் ஆண்டுகளானபிறகு, மனித அறிவு இப்படிப்பட்ட கதைகளெல்லாம் கட்டி, இறைவனை அறிவதற்கு முயன்றதே, என்னவிந்தை இது, என்று அவர்கள் எள்ளிநகையாடும் நாட்களில், ஓடின், மாஜிகடவுளான பிறகு, இங்கு, 'பஸ்மாசுரமோகினி' கதை, காலட்சேபமாய், நாடகமாய், சினிமாவாய், நாட்டிலேஉலவுகிறதே! இந்தக்கோணலைத்தடுக்க, யார் முன் வருகிறுர்கள்! அமிர்தம் — ஆலகால விஷம்—மோகினி அவதாரம் — நீல கண்டன்—என்ற சொற்களும், அவைகளைச் சுற்றிக்கொண்டுள்ள கதைகளும், பாமரருக்கு மனப்பாட மாக இன்றும் இருக்கிறதே! படித் தோரும் இவை வெறும் கற்பனை என்று கூறப்பயப்படுகிறுர்களே!! இதற்கென்ன செய்வது!

இந்நாளிலும் இங்குள்ள இந்நிலை, டியூடன்நாடுகளிலே, பன்னெடுங் காலத்துக்கு முன்பு இருந்துவந்தது அந்தப்பழைய காடி, பருகஉதவாது என்று சாக்கடையில் கொட்டிவிட்டு, அறிவு எனும் அருவிநீரை அள்ளிக் குடித்து அந்நாட்டுமக்கள், தெளிவு பெற்றனர்! நாமோ இன்றும், பஞ்ச கவ்யம் சாப்பிடும், பண்பிலேயே, இருக்கிறேம்!

நாகரிகமும் நல்லறிவும் இல்லாத நாட்களிலே, டியூடன் மக்களின் மனதிலே மருட்சியையும் பக்தியை யும் மூட்டிவந்த ஓடின், பல தேவி மார்களை மணம் புரிந்துகொண்டு பல குமாரர்களைப் பெற்றெடுத்ததா கப் புராணம் இருந்தது.

ஓடினின் முதல் மனைவி, ஜோர்ட் என்பவர்—ஏறத்தாழ, நமது நாட் டுப் புராணிகர்கள், சித்தரித்துக் காட்டிய, பூமாதேவி! டியூடன் பூமா தேவியின் புத்திரன்தான் தார் தேவன்—முருகன் போல, தந் தையைவிட இந்தத் தனயன், பராக் கிரமசாலி! (இவன் கதை பிறகு)

அழகன் பால்டர் என்பவன் மற் ருெர் மகன்! இவனைப் பெற்றெடுத்த தேவியின் பெயர், பிரிக்பெருமாட்டி!! ஒன்பது தேவ குமாரிகளை மணம் புரிந்திருந்தார் ஓடின் ஹெய் மிடால் என்று மற்றொர் மகனும் உண்டு, இந்த மகேசனுக்கு. லாக்

# கடவுளைத் தோற்கடித்த கடவுள்!

என்றோர் தம்பி, இருந்தான். மற்றும் பல தம்பிமார்கள்! பெரிய குடும்பம்!!

கடவுளுக்கு இப்படிக் குடும்பம், குழந்தை குட்டிகள், என்றெல்லாம் கூறுவது கேலிக்கூத்து — மதமாகாது—என்று, ஏதாவதோர் கல்லூரியில் பேசலாம்—மக்களிடம்சென்று பேசமுடியுமா! பார்வதி, கங்கா—தேவிமார்! முருகன், விநாயகன், பிள்ளைமார்! மைத்துனன், மகா விஷ்ணு! நந்தினிரதர், இசை தர! ரிஷபம், வாகனமாக இருக்க!—இப்படி இருக்கும் 'சிவனாரின் குடும்பம்' பெரிய குடும்பமாயிற்றே! கேலிசெய்தால், சைவர் எவ்வளவு சீறுகின்றனர், இன்றும்!! அந்தச் சீற்றம் இருந்தது, அறிவுத் தெளிவு இல்லாத காலத்தில் டியுடன் மக்களுக்கு! அவர்கள், ஓடின் தேவனால் தான், உலகு, அலைகடலால் அழிந்து போகாமலிருக்கிறது, என்று நம்பித் தொழுதுவந்தனர். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டிருந்தனர். கோயில் கட்டினர் — கோலாகல திருவிழா நடத்தினர்! பரமசிவனைப் பதிகம் பாடியும், முருகனைப்பிள்ளைத்தமிழ்பாடியும்,விநாயகருக்குஅகவல் பாடியும், அருள்பெற நம்மவர்கள் விரும்புவது போலவே டியுடன் மக்களும், கடவுளின் குடும்பத்தினரில், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வகையாகப் பூஜித்துப் பலன் வேண்டினர். அவர்கள்அன்று செய்து வந்ததை, எல்லாம் அறிவீனம் என்று கண்டறிந்து விட்டொழித்தனர், நமது பாமரரோ, அந்தப் பழயதையே உண்டு வருகின்றனர்--படித்தவர்களோ, அந்தப் 'பழயதுக்கு' ஊறுகாய் தேடித் தருகின்றனர்.

கடவுட் தன்மை என்பதை விளக்கவும், மக்கள் மனதிலே ஏற்படக் கூடிய, தீயஎண்ணங்களைத் தீய்த்து, அவர்களின் மனதைத் தூய்மையானதாக்கவும், கற்பனைக் கதைகள் பயன் பட்டுமே என்று வாதிடும் போக்கினரும் கூட உண்டு, இந்நாளில்! ஆனால், இதற்குக் கூடப் பயன் பட முடியாதபடியானவைகளும், பண்புக்கு ஊறு தேடுபவைகளும் உள்ள செயல்களையே, தேவனின் திருவிளையாடல் என்று தீட்டி வைத்துள்ளனர், புராணங்களில். இப்படிப்பட்ட, "திருவிளையாடல்களைக்" கொண்டே தேவனுக்கு, சிறப்புப் பெயர்களிட்டு, அர்ச்சித்தனர்!

இம்முறையில், ஓடினுக்கு, நாற்பத்தி ஒன்பது, பெயர்கள் உண்டு—அர்ச்சனைக்குரியனவாக!

பூலோகத்தைக் காணவும், வேறு பல உலகங்களைச் சுற்றிப்பார்க்கவும் ஓடின், வாயுவேக மனோவேகமாக ஓடக்கூடிய ஸ்லீட்னர் என்ற குதிரை மீதேறிச் செல்வாராம்.

ஓடினுடைய அற்புதச்சக்திகளைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து கதைபல தீட்டிய டியுடானிக்புராணிகர்,அதே கடவுளுக்குக் கஷ்டம் வருவதும் பகைவர் அவருக்கு எதிராகக்கிளம்புவதும், சில சமயங்களிலே, ஓடின் கடவுள் தோற்று ஓடுவதும் போன்ற கதைகளையும் தீட்டினர். கடவுள், சர்வசக்திவாய்ந்தவராயிற்றே, எதையும், ஆக்கி அழிக்கும் ஆற்றல் உள்ளவரல்லவா, அவரைச் சாதாரணச் சிற்றரசன்போலச் சில சமயம் சித்தரித்துக் காட்டுகிறோமே, இதுசரியா; சிந்தனைத் திறமுள்ளவர்கள் இதனை ஒப்புவரா, என்பது பற்றி எல்லாம் புராணிகன் எண்ணுவதில்லை, கடவுள் சம்பந்தமான கதைபற்றித்தான், சந்தேகிக்கவோ, ஆராயவோ கூடாதே—பாபம் என்று மதகுரு கட்டளை பிறப்பித்திருக்கிறானே! மதிகுறைந்த மக்கள், ஏன், ஆராயப் போகிறார்கள் என்ற தைரியம் புராணீகனுக்கு. எனவே, முரண்பாடு மிகுந்த பல கதைகளைப் புனைந்தான், துணிவுடன். பக்தி காரணமாக சகலத்தையும் விழுங்கினர் மக்கள்.

இப்படிப்பட்ட, கடவுட் தன்மைக்கே முரணான கதையும் உண்டு, ஓடின் புராணத்திலே.

ஒருசமயத்தில், ஆஸ்கார்ட் கடவுளர்களுக்கும், வான் மண்டலத்துத் தேவதைகளுக்கும் பெரும் போர் மூண்டு, ஓடின் தோற்றுவிட நேரிட்டது. ஆமாம்! மூலக்கடவுள் முறியடிக்கப்பட்டார், பரிவாரத்துடன். அவருடைய, மகன், அசகாயச் சூரன், தார்தேவனின் சக்திவாய்ந்த சம்மட்டி உடைந்து விட்டது, ஓடினின் மனம், அதைவிட அதிகமான அளவு உடைந்துவிட்டது. கடவு உலகு கலக்கமடைந்தது. ஆஸ்கா —அதாவது டியூடானிய மக் எதை, வைகுந்தம் என்றும் கை யம் என்றும் பயபக்தியுடன் கூறி தனரோ, அந்தக் கடவுளர் உல முற்றுகையிடப்பட்டது.

மூலக்கடவுளை முறியடிக்கக்கி பிய, வான்மண்டல வீரன் பெ நிஜார்ட். இவன் வீரத்தின் மு தாக்குப்பிடிக்க முடியாமல், கட கள் மூலைக்கொருவராக ஓட னர். வாயுவேக மனோவேகம ஓடக்கூடிய ஸ்லீப்னர் மீது ஏ கொண்டு, ஓடின், ஆஸ்கார் விட்டு, ஓடினார். அவர் மகன் தா ஆடுகள் பூட்டப்பட்ட அற்பு தேர் ஏறி, ஆஸ்கார்டை விட் வெளிஏறினான்.

வெற்றி பெற்ற வான் மண்டல தார், ஓடின், அரசோச்சி அம திருந்த பீடத்தில், உல் என்பவ அமரச் செய்தனர். புதிய கட ளானான், இந்த, உல்! கடவு எனும் அந்தஸ்த்தை இழந் ஓடின், தன் குடும்பத்துடன், ஓ பாதுகாப்பான இடம் போய் சேர்ந்தான். ஜுனகத் நவாப், ஓ விட்டார், என்று படிக்கும்போ சிரிப்பு வருகிறதல்லவா நமக் இவனும் ஒரு மன்னனா என்று இங்கு, கடவுள் ஓடுகிறார், தோற் —தலை தப்பினால் போதும் என்

ஓடினுடைய தம்பி, லாக்தேவ மட்டும், புதிய கடவுளின் பொ னடி தொழுபவன்போலப் பாசாங் செய்துகொண்டு, ஆஸ்கார்டிலே வசித்து வந்தான்.

சர்வ வல்லமையுள்ள கடவு தோற்று ஓடி, தனி இடம் தேடி தோடு, வான் மண்டலத்தா வீழ்த்த, என்ன செய்வதென் யோசித்தவண்ணம் இருந்தான்.

ஹாப்டான், என்றோர் அசுர இருந்தான்—அவனுக்கோர் மகன் அவனை, ஓடின், சிறு குழந்தையா இருக்கும்போதே, களவாடி சென்று, வளர்த்துவரலானான்.

இந்த அசுரகுலத்தாருக்கும்வா மண்டலத்தாருக்கும் தீராதப இருந்துவந்தது—எனவேதான், அ

# மாயாவதியின் காதல்

குழந்தையை ஆஸ்கார்டுகடவுள்,
கரையுடன் வளர்க்கலானூர்—
கு பகை மூட்டிவிட. குழந்தை
ர்ந்தது—ஓடின், தன் மந்திர
த்தைப் பிரயோகித்து, இந்தக்
ந்தையைஓர்மாவீரனுக்கினுன்.

ஹாடிங் எனும் இந்தஅசுரவீரன்,
லகார்டு மீது பிறகு படை எடுத்
: சென்றுன் பழிவாங்கும்
னர்ச்சியுடன். தன் வேலை முடி
வரையில் வேறு எக்காரியத்தி
ஈடுபட மறுத்து, தலைமயிரை
_ சடையாக வளர்த்து, கத்த
துக் கொள்ள வில்லையாம் இந்த
ரன்.

ஆஸ்கார்டு போகும் வழியிலேயே
த அசகாயச்சூரனுக்கு ஆபத்து
தது. லாக் தேவன், இவனைப்
த்து, ஒரு காட்டில் மரத்தில்
டி விட்டான். காவலாளிகளை
ர்த்தினுன், அவன் தப்பிப்
காதிருக்க.

ஹாடிங், ஒரு மந்திரப் பாட்டு
டினுன்—உடனே, அந்தக் காவ
ளிகள், மாயத் தூக்கத்திலாழ்ந்
ர். ஒரு பெரிய ஓநாய், கோரப்
யுடன் வந்தது அவனைக்கொல்ல.
ருேர் மந்திரப் பாட்டுப் பாடி
ன், ஓநாய் செத்தது! இன்னொரு
ட்டு; அவன் மீது பூட்டப்பட்ட
கள் யாவும் பொடிப் பொடியா
. இவ்வளவு வல்லமையுள்ள மந்
ப் பாடல்களையும், ஓடின்தான்
டிங்குக்குக் கற்றுக்கொடுத்திருந்
ன்!

வேடிக்கை பாருங்கள், இவ்வளவு
திர பலமும், ஓடினுக்குப் பயன்
வில்லை, தோற்ருேடி விட்டான்.
வனே பிறகு, மந்திர பலத்தை
ன்னொருவனுக்கு அளிக்கிறுன்!

ஹாடிங்கின் கஷ்டம் இவ்வள
டு நிற்கவில்லை. ஓநாய் ஒழிந்தது.
ல் ஓர் ஒய்யாரி வந்தாள், அவன்
ன்—காதல் செய்யலானுள்.

'பாவாய்! பழி தீர்க்கும் பணியில்
பட்டுள்ள என்னை நாடாதே—"
கிறுன் வீரன்,

'பாராய் என் அழகை! கூறாய்
காதல் மொழி" என்று கெஞ்சு
ள் அவள்.

அவள் ஓர் அரக்க குலஅணங்கு.
யர், ஹார்ட் கிரேப். அரக்கி

எனினும், விரும்பியபடி எல்லாம், வடிவமெடுக்கக் கூடியவள். விஸ்வரூபம் எடுக்கிறுள் ஓர் சமயம், விண்ணும் மண்ணும் நிரம்பிட நிற்கிறுள். —மறுவிநாடி அந்த மாயாவதி, அதிரூப சுந்தரியாகி, அன்பைப் பொழிகிறுள்.

அவளுடைய கொஞ்சுமொழியில் மயங்கவில்லை, மாவீரன் — போர்—போர் — என்று கொக்கரித்தான். அவளும் அவனை விடவில்லை—ஆண் உருவெடுத்து, ஆயுதம்தாங்கி அவனுடன் சென்றுள், போருக்கு.

இருவரும் பல ஆபத்துக்களைக் கடந்து, ஆஸ்கார்டுக்குப் பயணமாயினர். இடையில், மாயாவதிக்கு ஒரு பிசாசு கொடுத்த சாபத்தின் காரணமாக, 'பெருங்கை'யால் சாவு ஏற்பட்டது.

'பெருங்கை'—என்றுல் என்ன! ஒரு கரம்! அண்டபிண்ட சராசரத்தையும் அடக்கி அழிக்கக் கூடியது! எப்போதேனும் தோன்றும் மறையும்!

யாருடைய கரம்? புராணிகன் கூறுவதில்லை! கடவுளுக்கும் இல்லாத சக்தி, எப்படி அந்தக் கரத்துக்குக் கிடைத்தது? விளக்கம் கிடையாது! விளக்கம் கேட்கக் கூடாதே! பாபமல்லவா!! எனவே, இதையும் நம்பினர் மக்கள்.

ஹாடிங், ஒரு ஓநாயை மீண்டும் எதிர்த்துப் போராட நேரிட்டது—அதைக் கொன்று, அதன் குடலைத் தின்றுனும் — உடனே, எவராலும் அடக்கமுடியாத அளவு, பலம் ஏற்பட்டுவிட்டது.

இனி அவனுடைய எதிர்ப்பைச் சமாளிப்பது வீண் என்று கண்டு கொண்ட, வானமண்டலத்தார், சமாதானமாக விரும்பினர்.

ஓடினுடைய பீடத்திலிருந்த உல், தார் தேவனிடம் தூது சென்றுன். சமரசம் ஏற்பட்டது. மீண்டும் ஓடின், கடவுளானுன்!

இதுபோன்று, மற்ருேர்முறையும் ஓடின், 'கடவுள் வேலை'யை விட்டு விட்டு, ஓட நேரிட்டது.

ஹாதர் என்பவன், கிளம்பி, தன் பராக்கிரமத்தால் கடவுள்களைத் தோற்கடித்து, தேவலோகத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்டான். ஓடின், தார், பால்டர், எனும் பல கடவுள்களும் ஒன்றுகூடிப் போரிட்டும், பயனில்லை. மீண்டும் ஓடின், பதவி இழந்து, நாடோடியாக நேரிட்டது. பால்டரும் இறந்து விட்டான்.

சோகத்துடன், ஓடின், ஆரூடக் காரரிடம் சென்றுன்—ஆண்டவன் போகிறுன், ஆரூடம் கேட்க! ஆருடக்காரர், உன் அவமானத்தைப் போக்கி, பழிக்குப் பழி வாங்க, உனக்கோர் பாலகன் பிறப்பான், அவ்விதமான பாலகனைப் பெற்றெடுக்கக்கூடிய பாக்யவதி, ரிண்டா என்பவளை, நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றனர்.

'நாம் கோகுலத்தில் பிறப்போம் கம்சனைக் கொல்ல' என்று அசரீரி கூறுவதுபோலத்தான், இதுவும்.

ரிண்டா எனும் மங்கை, ருதேனியர்களின் மன்னனின் மகள். அவளை அடைய விரும்பி, ஓடின், மானிட உருவெடுத்துச் சென்று மன்னனிடம் பணியாளாகி, அவன் மனம் மகிழத்தக்க பல செயல் புரிந்து, மன்னன் மகிழ்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து, "மன்னு! எனக்கு உன் மகள், ரிண்டா தேவியை மணமுடித்துத் தரவேண்டும்" என்று கேட்டான். மாவீரனை மருகனுகப் பெறுவதிலே, மன்னனுக்கு விருப்பந்தான்—எனினும் மகளின் சம்மதத்தைப் பெற்ற பிறகே, மணம், என்று கூறி விட்டான். எனவே, ஓடின், ரிண்டாவின் காதலைப் பெற முயற்சித்தான்.

அவளோ, "இவன் வீரன் என்பது சரி—ஆனால் வயோதிகன்! நானே இளமங்கை! எனக்கோ இவன் மணாளனுவது!" என்று சீறினுள். ஓடினே அவளை அடைந்தாக வேண்டும்—காதலுக்காக அல்லவாயினும், அவளை மனைவியாகப் பெற்று, ஒருமகனை அவள் ஈன்றெடுத்துத் தந்தால்தான், இழந்த மானத்தை மீட்கமுடியும்—அதற்காக அவள் வேண்டும். அவளோ, வயோதிகனை மணாளனுகக் கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறுள். ஓடின், விதவிதமான காதல் விளையாட்டுகளெல்லாம் செய்து பார்க்கிறுர்—ஒன்றும் பலிக்கவில்லை. அவளை முத்தமிடச் சென்றுராம்

ஓர் முறை, ஓங்கிக் கொடுத்தாளாம் ஓர் அறை, கன்னத்தில்!

எவ்வளவு இழிவு வருவதானாலும், சரி, பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும். பலமுறை முயன்றார் பகவான்! கடைசியில் அவளுக்குப் பிசாசு பிடிக்கும்படி செய்து, அதை ஓட்டும் மந்திரவாதியாக மாறி, அவள் மனதை மயக்கி, மணமுடித்துக்கொண்டார்.

போயி—எனும் குமாரனைப் பெற்றெடுத்தாள், ரிண்டா. இந்தக் குமாரன், தந்தையை விரட்டிய தருக்கனைத் தோற்கடித்து, ஓடினை மீண்டும் கடவுளாசனத்தில் இருக்கச் செய்தான்.

இப்படி இருக்கிறது ஓடின் புராணம்!

ஒன்றுக்கொன்று பொருத்தமோ, ஒன்றினுக்காவது பொருளோ, எதிலாவது, உண்மையான கடவுட் தன்மையோ, கடுகளவும் காண முடியாத கதைகள். எனினும் அவைகளை, டியூடன் மக்கள், பயபக்தியுடன் பாராயணம் செய்வதை, மதக் கடமையாகக் கருதினர். அவர்களுக்கு அந்தக் காலத்திலே கிடைத்த கம்பன்கள், காவியம் பாடினர்—ராஜாக்கள் கோயில் கட்டினர்—தம்பிரான்கள் தோன்றினர்—பக்திப் பிரவாகம், பல மண்டலங்களிலும் பெருக்கெடுத்தோடியது.

எவ்வளவு ஆபாசம், எத்தனை சதி, வஞ்சனை, நிரப்பியதாக உள்ளன இக்கதைகள் — இவைகளைக் கொண்டு, கடவுளுக்குப் பெருமை கற்பிக்க எண்ணுகிறீர்களே, பேதையரே! நீங்களா, உண்மை ஆத்திகர்கள்? இதுவா, மார்க்கம்? என்று, கேட்கும் துணிவும் தெளிவும் ஏற்பட நெடுங்காலம் பிடித்தது. ஆனால் தெளிவு ஏற்பட்டதும், கேட்டனர், அங்கு. கேட்டபோது, அவர்களுக்குக் கேடு செய்தனர் மூடர்கள். எனினும் அவர்கள் உண்மையை நிலைநாட்ட அஞ்சவில்லை. உயிர் பெரிதல்ல, உலகை உருக்குலையச் செய்யும் உத்தமர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்பதே பெரிது என்றெண்ணிப் பணி புரிந்தனர்—வெற்றி பெற்றனர்—ஓடன் ஓட்டமெடுத்தான், கோயிலிலிருந்து; மக்கள் மனதிலிருந்து!! மாஜி கடவுளானான்!

"அண்டங் காக்கையைக் கண்டேன்!" என்று புளுகு பேசிய பூஜாரிகள்— "ஓநாய்கள் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு வந்தது சொப்பனத்தில்" என்று பிதற்றிய பேதையர், தெளிவு பெறுவது, எளிதான காரியமல்ல, மத வெறியை எதிர்த்து நிற்பது, ஆபத்தான காரியம். எனினும், நல்லறிவாளர்கள், எதிர்த்து நின்றனர், வெற்றி கண்டனர்; விரட்டி அடித்தனர், கற்பனைகளை.

கடவுளுக்குக் குடும்பம்; அதிலே கலகம்!

கடவுளுக்கு எதிரிகள்—அதனால் அவர் தோற்று ஓடுவது!!

இவைகளை நம்பிய மக்களின் தொகை, ஏராளம், அன்று.

இன்று, அவைகளைக் கேட்டுத் துள்ளி விளையாடும் பிள்ளைகளும், எள்ளி நகையாடும்—அங்கு!

இங்கோ, இன்றும், தக்கனைச் ... னார் கொன்ற புராணத்தை ந... மறுப்பவன், பாபியாகக் கருதப்படு...றான். கடவுள்களுக்குள் சண்டை... தேவலோகத்தில் கலகம் — ஒ... தேவனை மற்றோர் தேவன் தோ... கடிப்பது—என்பன போன்ற பு...ணக் கதைகளை, புண்ய கதைகளா... கொண்டு, புத்தியின் போக்கை... பாமரர் பாழ்படுத்திக் கொள்கின்...னர்.

எவ்வளவோ கோலாகலமா... 'வாழ்வு' நடத்திய, ஓடின், மாஜி க...வுளானதை, நம் நாட்டுப் பாம... அறியார். அறிந்தவர்கள் உரை...வும் அஞ்சுகின்றனர்!

*

# 'தருமம் தாரு, ஐயா!'

மோகனத்திலா, காம்போதியிலா இந்தப்பாட்டு என்று கேட்டுவிடாதீர்கள்—நாட்டிலே நசுக்கப்பட்டிருப்போரின் குரலொலி; ஓரளவுக்கு முகாரி கலந்திருக்கும், 'தர்பார்' எதிர்த்தரப்பிலிருந்து கிளம்பினால், முகாரி போய், அடாணாவாகிவிடும்.

எந்தச் சமுகமும் குலமும், மற்றச் சமுகத்தினால் பல்வேறு துறைகளிலே அழுத்திவைக்கப்பட்டால், துவக்கத்திலே துயரம் தாங்கமாட்டாமல், 'நம்கதி' இதுதான், என்று எண்ணி, தமது எண்ணத்தை வெளியே எடுத்துக் கூறவும் துணிவும் வாய்ப்புமின்றிக் கிடக்கும். ஆனால் கடைசி வரையிலல்ல! உள்ளத்துக்கு உரம் மெள்ள மெள்ள ஏறிக்கொண்டே வரும்—அவர்களையுமறியாமல்—ஆதிக்கக்காரர்களுக்கும் தெரியாமல். நேற்றுவரை நிமிர்ந்து நடக்கக்கூடத் தைரியமில்லாதிருந்தானே இன்று எங்கிருந்து பிறந்தது இந்தத் துணிவு என்று ஆதிக்கக்காரர்களே, அச்சத்துடன், பேசும் நிலைகூடப் பிறந்துவிடுவதுண்டு. அந்த நிலை வருகிறவரையில் ஆதிக்கக்காரர்கள், தங்களை யாரும் அசைக்கக்கூட முடியாது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள், ஆர்ப்பரிப்பு அவர்களின் கீதமாக இருக்கும், அட்டகாசம் அவர்களின் நடனமாக இருக்கும், மமதை... மேடை ஏறி, ஆடுவர், பாடுவர்; ம...கள் மன்றத்திலே, நசுக்கப்பட்டவ...கள் ஒன்றுகூடி, அணிவகுத்துநின்... உரிமைக்குப் போரிடத் துணியும் வரையில்.

உரிமைப்போர், என்றவே... ஏதோ ஒருநாட்டின் மீது மற்றோ... நாடு கொண்டுள்ள ஆதிக்கத்தி...ருந்து விடுபட்டு, நாடு உரிமை பெ...வதுதான், என்ற எண்ணத்தைச் சிலர் ஊட்டிவிட்டார்கள். எனவே பொதுமக்களில் பலருக்கு, உரிமைப் போர் என்பது, எவ்வளவு விரிவா...னது, எவ்வளவு வகை வகையானது என்பது சரியாகப் புரிவதில்லை— இந்த மனநிலையைத் தமக்குச் சாதக...மாக்கிக்கொண்டு, எவ்விதமான உரிமை உணர்ச்சியையும், அந்த... உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிகளையும் ஒடுக்கி... விடவே முயலுவர் — தோல்விதான் இதிலே என்றபோதிலும், முயற்சிக்...காமலிரார். ஆதிக்க ஆசை அவ்வ...ளவு சுலபத்திலா போய்விடும்!

இங்குமட்டுமல்ல, பொதுவாக எங்குமே உடலுழைப்பைத் தந்து ஊரைக்காப்பாற்றும் மக்களை, அழுத்திவைப்பதையே, திட்டமாகக் கொண்டு, தன்னலக்காரர்கள் பல... காலமாக, தங்கள் ஆதிக்கத்தைக்...

...ப்பாற்றிக்கொண்டு வந்துள்ளனர். ...மம்தானு ஐயா!—என்று தழ ...த்த குரலிலே கூடக்கேட்பதற்கு,' ...க்கப்பட்டுக் கிடந்தவர்களுக்கு ...ண்ணம் பிறவாமலிருந்தபோது, ...திக்கக்காரக்கள், தமது போக்குப் ...றி, யாருக்கும் சமாதானம் ...ால்லவோ, விளக்கம் கூறவோ ...ண்டிய அவசியமில்லாதவர்களாக ...றுமாந்து கிடந்தனர். ஆடவர் ...ண்களையும், உயர் ஜாதியினர் ...ழ்ந்தவர் என்போரையும், வெள் ...யர், கருப்பரையும், முதலாளிகள் ...ாழிலாளரையும், இதுபோலவே ...த்திவந்தனர்; வருகின்றனர்.

* * *

...குரலிலே நடுக்கத்தோடு, ஆனால் ...தனையைப் போக்கிக்கொள்ள, ...தேனும் வழி கண்டாகவேண்டுமே ...ன்பதற்காக, அழுத்தப் பட்டுக் ...ந்தோர், தருமம்தானு ஐயா! ...ன்று கேட்டனர் — கொதித்து ...ழுந்த ஆதிக்கக்காரர், "என்னடா ...து, என்றுமில்லாத வழக்கம்— ...துக்குனக்கிந்தப்பதட்டம்" என்று ...ாக்கரித்தனர். படிப்படியாக, ...றைமாறத் தொடங்கிற்று. கெஞ்சி ...ன்றவர்கள், பிறகு, நியாயம் கேட்க ...யினர்,—கிடைக்கவில்லை—எனவே, ...க்ரமப் போக்கைக் கண்டிக்கவே ...ரம்பித்தனர்—பிறகு கிளர்ச்சி,— ...ன இவ்வாறு, முறை வளர்ந்தது. ...துகள் என்ன செய்துவிட முடி ...ம்?' என்ற போக்கு ஆதிக்கக்கார ...ம் நிலைக்க முடியாது போகவே, ...வர்கள், பலகாலப் பழக்கம்— ...ர்வீக ஏற்பாடு—தர்மத்தை அடிப் ...டையாகக் கொண்ட திட்டம்— ...லகீழ் மாற்றம் தவறானது—அவ ...ப்பட்டு மாற்றி விடுவது ஆபத்து ...மெள்ள மெள்ள மாற்றவேண்டும் ...மாறும்போது மனமாச்சரியம் ...ட்டக்கூடாது—என்று இவ்வண் ...ம், ஒவ்வொரு படியாகக் கீழே ...றங்கி வரவேண்டி நேரிட்டது. ...ல இடங்களில், அவர்கள் இறங்கி ...ரவில்லை—கீழே உருட்டித் தள்ளப் ...ட்டனர், உள்ளத்தில் வேதனை ...குந்த மக்களால். அதுதான் ...ட்சி!

* * *

...சில இடங்களிலே, சமயமறிந்து ...ரிமைக் கிளர்ச்சியைத் துவக்காது ...ான காரணத்தால், ஆதிக்கக்காரர் ...ள், தங்கள் அட்டகாசப் போக்கை, ...ற்றிக் கொள்ளவோ, மட்டுப்படுத்தவோ கூடத் தேவையற்றுப் போய் விட்டது. "ஆமாம், இப்படித்தான் செய்வோம் - இதை, ஏன் என்று கேட்டால், இடி! எதிர்த்தால், அடி!!" என்று இறுமாப்புடன் பேசவும் செய்கின்றனர். அழுத்தப்பட்டுக் கிடப்பவர்கள், அறிவு ஆற்றலைக் காட்டிய போதிலும், கூண்டுக்கிளி பாடும்போது, கொவ்வை கொடுத்துக் கொஞ்சுவது போல, இந்த ஆதிக்கக்காரர்கள் நடந்து கொள்கின்றனரே தவிர, உரிமை தர மறுக்கின்றனர் — உள்ளன்பு காட்டுவதில்லை — நேர்மையைக்கடைப்பிடிப்பதில்லை. இந்தக் 'காட்டு மிராண்டி'ப் போக்கு, நவநாகரிக மிகுந்த அமெரிக்காவிலே இன்று தலைவிரித்தாடுகிறது. அங்கு நீக்ரோ மக்கள், இழிவாக நடத்தப்படுகின்றனர் — இம்சைக்கு ஆளாகின்றனர்—வெறிச்செயல் புரியும் வெள்ளையர்களை அங்கு வீரர்களென்று பாராட்டவும் மக்களில் பலர் முன்வருகின்றனர். நீக்ரோ தலைவர்கள், உலகெங்கும் உள்ள, நல்லறிவாளர்களின் ஆதரவை நாடிப் பெற்றும்கூட, இம்சை நடந்தபடியே இருக்கிறது. உலக இசைவாணர்களிலே ஒருவர் என்று புகழ் பெற்ற பால் ராப்சன், இசை விருந்தளிக்க இருந்த கூட்டமொன்றைத் தாக்கினர், தருக்கர்கள் என்ற செய்தி சென்றவாரம் வெளிவந்தது.

சம்பவம் நடந்த இடம், ஜனநாயகம் மலர்வதாகப் பேசப்படும், அமெரிக்காவில், நியுயார்க்குக்கு அருகிலுள்ள பூக்ஸ்கில் நகரம்! அது நடந்து ஒரு வாரத்திற்கெல்லாம், மீண்டும் ஒருமுறை, வீணர்களின் வெறிச் செயல் நடை பெற்றிருக்கிறது. பால்ராப்சனின் இசை விருந்து இவ்வாரம், கடந்த சம்பவம் நடந்த ஒரு மைல் தூரத்தில் மீண்டும் நடைபெற்றிருக்கிறது. இசைவாணரின் இன்னிசையைக் கேட்டுவிட்டுத் திரும்பிய பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மீது கல் வீசி, கலவரம் விளைத்துப் படுகாயப்படுத்தியுள்ளனர், கலகக்காரர்கள்.

இசை விருந்து கேட்டுத் திரும்பிய, கார்கள் கவிழ்க்கப்பட்டதாம்! மக்களை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ்கள் யாவும் பலமாகத் தாக்கப்பட்டன—வர்ம்-பலருக்கு இதன்விளைவாகப்படுகாயம், என்று பட்டியல் வெளி வந்திருக்கிறது. இசை நிகழ்ச்சி நடை பெறும்போது, கூடி நின்று கூச்சல் போட்டு, நிகழ்ச்சியைக் கலைக்கவும் எத்தனித்து இருக்கின்றனர். முயற்சி, பலிக்காமற்போகவே, நிறவெறியர்கள் மூர்க்கத்தனத்துடன் இத்தகைய அட்டூழியங்களில் ஈடு பட்டிருக்கின்றனர்.

சரியான சமயத்திலே, உரிமைப் போர் நடத்தத்தவறியதன் விளைவே, இந்த வேதனை தரும் நிலைமை. அமெரிக்க பூபாகத்திலே ஐரோப்பிய நாடுகளிலிருந்து, விரட்டப்பட்டவர்கள், வீடுவாசல் அற்றவர்கள், நாடோடிகள், பிழைக்க வகையற்றவர்கள், பெற்றோரால் வெறுக்கப்பட்டவர்கள், என்பவர்களெல்லாம் கூடத்தான், சென்று குடிஏறினர் — பூர்வீகக் குடிகளை அழித்தனர்—அடிமை வியாபாரம் செய்தனர்—நீக்ரோக்களை, ஆடுமாடு பிடிப்பது போலப் பிடித்து, கப்பல் கொட்டடிகளில் அடைத்து, அமெரிக்காவில், விற்றனர், கடற்கொள்ளைக்காரர்கள், மனிதருள் மிருகங்கள்! நெடுங்காலம்—பல தலைமுறை —தருமம் தானு ஐயா! — என்று கூடக் கேட்டபதற்கு, முடியாது போய்விட்டது, நீக்ரோக்களால்— கட்டுப்பாடான முறையில். எனவேதான், அமெரிக்காவிலுள்ள ஆணவக்காரர்கள் சிலரால், இந்த நாகரிக நாட்களிலேயும், நீக்ரோக்களைக் கொடுமைப்படுத்த முடிகிறது.

* * *

பால்ராப்சன், இந்த அக்ரமத்தை இனியும் சகித்துக்கொள்ள முடியாது, என்று வீரமாகப் பேசியிருக்கிறார். அவருடைய வீரப்போக்கைப் பாராட்டுகிறோம். அமெரிக்காவில் எந்த இடத்திலும், இசைபாடி-மக்களை மகிழ்விப்பேன்—அதனைத் தடுக்கும் உரிமை எவருக்கும்கிடையாது — எவரேனும், கலகப்செய்தால், அவர்களை அடக்குவது, போலீசின் கடமை—என்று குறிப்பிட்டுவிட்டு, "போலீசின் பாதுகாப்பு எப்போது கிடைக்கும்—கிடைக்கும் படி செய்வதற்கு என்னவழி?— என்றால், நம்மைநாமே பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற நிலை ஏற்படுவதுதான்" என்று தெரிவித்திருக்கிறார். உண்மை. தருமம்தானு ஐயா! என்ற குரலொலியை மதிக்க, அதிலே தோய்ந்திருக்கும் துயரை மதிக்க, துடுக்குத்தன மிக்க, ஆதிக்கக்காரர்கள் முன்வரமாட்டார்கள்! பால்ராப்சன்கள்தான் முன்வர வேண்டும்.

# திராவிட நாடு

ஞாயிறு] 11—9—49 [காஞ்சி

## மங்களபுரி மைனர்.

—o—

'இலட்சாதிபதி பவன்'! என்ற கட்டிடம், வாங்கப்பட்டிருக்கிறது. இலண்டனில், 'இந்திய சர்க்காரால்!' கட்டிடத்தைப் புதுப்பிக்கவும், அழகு படுத்தவும், முப்பதாயிரம் பவுன் செலவாகக் கூடும், என்று, செப்பனிடும் அலுவலகத்தார், கணக்கிட்டுக் கூறுகின்றனர். இந்த நிலையில், கட்டிடக் கிரயம் ஐம்பதாயிரம் பவுன் ஆகக்கூடும் என்று 'ஸ்டார்' எனும் பத்திரிகை எழுதுகிறது. இந்த 'மாளிகையிலே', இனி, இந்தியாவின் தூதுவர் காரியாலயம் இருக்குமாம்.

ஐம்பதாயிரம் பவுன் செலவில் அழகு மாளிகை வாங்குகிறார்கள், சீமையில். 'அந்தஸ்து' அந்த அளவுக்கு உயர்த்திக் காட்டப்படுகிறது. ஏன்? பதில் இல்லை!

கோடீஸ்வரர்கள் நாடான அமெரிக்கா, இந்தியாவிலே இப்படிப் பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைக்கக் காணோம். தரித்திர நாராயணர்கள் நிரம்பிய இந்தியா, துறவு மனப்பான்மை கொண்ட இந்தியா, ஆத்மீக பலத்தையே நம்பும் இந்தியா, அரை இலட்சம்பவுன் செலவுசெய்கிறது, கட்டிடம் வாங்க! தூதுவர் விடுதிக்கு!!

விரைவிலே, நமது இதழ்களிலே, அந்தக் கட்டிடத்தின், 'போட்டோ' வெளியிடப்படும்; கிருஷ்ண மேனன், தோட்டத்தில் உலாவுவது; விருந்தினர் தங்கும் கூடம்; விளையாட்டு மைதானம், இவைகளைப் பற்றிய விளக்கம், தரப்படும்; விமானமூலம், காந்தியாரின் சிலையோ சித்திரமோ அனுப்பப்படலாம், அந்த மாளிகைக்கு!

அந்தப்படத்தைப் பார்க்கும் போது பூரிப்பாகத்தான் இருக்கும். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் நம்மைப் பிடித்தாட்டிய ஏகாதிபத்தியத்தின் இருப்பிடமும் பிறப்பிடமுமான சீமையில், விடுதலை பெற்ற இந்தியா, தூதுவர் காரியாலயத்தை நிறுவிக்காட்டுகிறது, என்று புகழ் பேசப்படும்; படம், ரம்மியமானதாகத் தான் இருக்கும்; இந்தியாவின் அந்தஸ்த்து, உயர்ந்துவிட்டது, என்பதைக் காட்டும் படம்!

ஆம்! ஆனால் சென்றவாரம், எல்லா இதழ்களிலும், வேறோர் படம் வெளிவந்தது. தெளிவற்றவர்கள் அதனைக் கண்டு களித்திருக்கக் கூடும், ஆனால் நிலைமையை உணர்ந்தவர்களின் மனதிலே, வேதனைதான் ஏற்பட்டிருக்க முடியும்.

"யாரடா, மோட்டாரில்?

மங்களபுரி, மைனர்.

வந்துவிட்டாரா, மைனர்?

உள்ளே நுழைகிறார்.

போடா, போய் உபசாரம் செய். இதோ வந்துவிடுகிறேன்.

எங்கே உட்காரச் சொல்ல!

முட்டாளே! மங்களபுரி மைனர் வந்திருக்கிறார் என்றால் சாமான்யமா அது. உள்ளே கூடத்தில், சோபாவில் உட்காரச் சொல். குளிர்ந்த பானம் வேண்டுமா, என்று கேள், மரியாதையுடன். மயில் விசிறி கொண்டுவீசு, வேண்டாம் என்று கூறினாலும், மனம் கோணாமல் நடந்துகொள். இதோ வந்துவிடுகிறேன்."

வட்டி வியாபாரம் வளர்ந்தான் பிள்ளையும், அவர் பணியாள் அமர்ந்தான் பிள்ளையும், பேசுகின்றனர் இதுபோல. மங்களபுரி மைனர், மோட்டாரை விட்டு இறங்கி, மாளிகைக் குள்ளே நுழைகிறார், கெம்பீரமாக. சில நிமிஷங்களுக்குப் பிறகு, வட்டி வியாபாரம், வளர்ந்தான் பிள்ளை வருகிறார்—புன்னகை புரிகிறார்—மங்களபுரியின் ஷேம இலாபங்களைக் கேட்கிறார் — மைனரின் குணத்தைப் புகழ்கிறார். மைனர், மகிழ்ச்சியுடன் இருக்கிறார். பிறகு, ஒரு காகிதம், மைனர் எதிரே நீட்டப்படுகிறது — மைனர், கையொப்பமிடுகிறார்— ஒரு 'செக்' அவரிடம் தரப்படுகிறது — மைனர் அதைப் பெற்றுக்கொள்கிறார்—உபசாரப் பேச்சு மீண்டும் நடக்கிறது—விடை பெற்றுக்கொண்டு போகிறார் மைனர்—அவர் எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரத்தை, அகமகிழ்ச்சியுடன் படித்துப் பார்த்துப் பூரிப்படைகிறார், வட்டி வியாபாரி!

அவருக்கு அகமகிழ்ச்சி—மங்
புரி மைனருக்கு, அலட்சிய
விளைவு தெரியாததால். ஆனால்,
களபுரியின் வாழ்வுக்காகப் பா
பட்டுழைக்கும் உண்மை ஊழிய
மைனர் அடமானப் பத்திரத்
கையொப்பமிடும் காட்சியைக் க
டால், கலங்கித்தானே போயி
பான். மங்களபுரியை ஈடுகாட்
மைனர், கடன் வாங்குகிறார்—இ
நிலைக்கு வந்திருக்கிற
மங்களபுரி—இன்னும் போகப் போ
என்ன ஆகுமோ? கடனைத் தி
பித் தரும் திறன் மைனருக்
இருக்குமோ, இராதோ! கடன் வா
கிய பணத்தைக் கதம்பப் பொ
குச் செலவிடுகிறாரோ, கருத்துள்
விதமாகச் செலவிடுவாரோ, எ
றெல்லாம் எண்ணி ஏங்குவா
அல்லவா? மைனரும் வட்டி வி
பாரியும், சந்தித்த காட்சி, படம
கப்பட்டால் அதைப் பார்க்கவு
வெட்கப்படுவான், துக்கப்படுவா
உண்மை ஊழியன்.

* * *

4—9—49 ல் பத்திரிகைகளி
வெளிவந்த படத்தைப் பாருங்க
அம்மை விஜயலட்சுமி, கையொப்
மிடுகிறார், கடன் பத்திரத்தி
கடன் தொகை 340 இலட்ச
டாலர். மேலும் கடன் வாங்க
போகிறார்களாம்—இதுமுதல் தவ
யாகத் தரப்படும்கடன். உலக பா
யிலே, கடன் வாங்கப்படுகிறத
இந்தியா, ஈடுகாட்டப்பட்டு!! சா
ரண வழக்கத்தில் கூறுவதான
இந்தியவை அடமானம் வைத்
கடன் வாங்கப்படுகிறது. இந்திய
வெள்ளையரிடமிருந்து விடுத
பெற்றது, இப்போது, கடனாளி
கிக் காட்சி தருகிறது.

அந்தக் கடன் பத்திரத்தி
விஜயலட்சுமி அம்மையார்
கையொப்பமிடும் காட்சி, படமா
வெளிவந்திருக்கிறது — அதை
காணும்போது, உண்மையான
நாட்டுப் பற்றும், எதிர்காலத்தை
பற்றிய கவலையும் கொண்டவர்கள்
துக்கப்படாமலிருக்க. முடியாது
இந்தியா, அடமானப் பொருளா
விட்டது!! யார் விரும்புவர், இந்
நிலைமையை? ஏன், ஏற்படவேண்டு
இந்த நிலைமை?

பணம் இல்லை, 'பாரத தேசத்தில், பல புதிய தொழில்களை நடத்த, ஆறுகளிலே, தேக்கம் அமைக்க, புதிய வளம் பொங்கச் செய்ய! பணம் தேவை, பணம் இல்லை—பணம் இல்லையா?—பணம் இருக்கிறது, ஆனால் சர்க்காரால் பெற முடியவில்லை. கடன் வாங்குகிறது சர்க்கார், அமெரிக்க ஆதிக்கம் மிகுந்த உலக பாங்கினிடம்.

* * *

மங்களபுரி மைனர் கதைபோலிருக்கிறது, மனவேதனை ஏற்படத்தானே செய்யும் உண்மை ஊழியர்களுக்கு. உலகச் சூழ்நிலை அறியாதவர்கள், ஒரு தேசம் இன்னொர் தேசத்திடம் கடன் படும் பிரச்னை எவ்வளவு சிக்கலான பிரச்னைகளை உண்டாக்கும் என்பதை உணராதவர்கள், கடன் கொடுத்து இடம் பிடிக்கும் திட்டம் கொண்டதுதான் புதிய ஏகாதிபத்யம் என்ற சூட்சமம் தெரியாதவர்கள் வேண்டுமானால்; படத்தைப் பார்த்து, விஜயலட்சுமியார் வீற்றிருக்க, கட்டியம் கூறுபவர் போல, இரு ஆடவர், பக்கம் நிற்கிறார்கள் பாரீர்! அம்மையாரிடம் அவ்வளவு மதிப்பு, அமெரிக்க நாட்டிற்கு! என்று கூறிக் களிப்படைவர்.

அம்மையார் இந்தியாவை ஈடு காட்டிக் கடன் வாங்குகிற காட்சி அது—340 இலட்சம் டாலர் கடன்—பதினைந்து ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டும்—வட்டி, நூற்றுக்கு மூன்று.

'ரெயில்வேக்களை' புதுப்பிக்கவும், சரி செய்யவும், இந்தப் பணம் செலவிடப் படும் என்று கூறப்படுகிறது. இந்தப் பணத்திலே, 100 இலட்சம் டாலர், ஏற்கெனவே அமெரிக்காவில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, ரயில்வே சாமான்களுக்காகத் தரப்பட்டுவிடும். கனடாவில் வாங்கப் போகும் சாமான்களுக்காக 170 இலட்சம் டாலர் தரப்பட்டுவிடும்.

கடன் கொடுத்திருப்பவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் பாருங்கள்.

பண்டித நேரு கூட அமெரிக்காவுக்குப் போகும்போது கனடாவுக்கும் போகிறாராம்! போகத்தானே வேண்டும்!!

* * *

ஐம்பது இலட்சம் பவுன் செலவில் சீமையில் வாங்கப்படும் இலட்சாதி பவனப் படத்தை ஒரு பக்கத்திலும், கடன் பத்திரத்தில் விஜயலட்சுமி அம்மையார் கையொப்பமிடும் படத்தை அதற்குப் பக்கத்திலும் ஒட்டவைத்து, ஆங்கிலப் பெருங்கவி, ஷேக்ஸ்பியர் கூறினாரே, அந்தப் படத்தையும் பார்—இந்தப் படத்தையும் பார்! என்ற வாக்கியத்தைத் தீட்டிக்காட்டுவது, பொருத்தமாக இருக்கும்—ஆனால் சகிக்கக் கூடியதாக இராது. ஷேக்ஸ்பியர் தானா கிடைத்தார், நம் காட்டுக்கவி கம்பனின் வாக்கியம் இருக்கப் பாடாதோ என்று, கோபிப்பரேல், தடையில்லை நமக்கு, படத்தின் கீழே, 'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற அடிகளைப் பொறித்துப்பார்க்கட்டும். எதைஎழுதினாலும் சரி, காட்சி மனதுக்கு, சங்கடம் தரக்கூடியதாகவே இருக்கிறது.

* * *

கடன் வாங்குவது ஒரு பெரிய கெடுதி என்பதல்ல—பெரியதோர் பொறுப்பு. , அதற்கு ஏற்ற வண்ணம், ஆட்சியாளர்கள், நடந்து கொள்ள வேண்டுமே, என்பதே நம் கவலை. பணம், தக்கபடி, பலன் தரும் விதமாகச் செலவிடப்படவேண்டும்—அப்போதுதான், இவ்வளவு பெருந்தொகையை வட்டியுடன் திருப்பித் தரமுடியும்—பதினைந்து ஆண்டுகளில். விழலுக்குப் பாய்ச்சிவிட்டால், விபரீதம் நேரிடுமே என்ற விசாரம்தான். சீமையிலே சிங்காரமாளிகை வாங்கும் போக்கிலே இருக்கிற ஆட்சியாளர்கள், இந்தப் பொறுப்பை உணர்ந்து காரியமாற்றுவார்களா, என்று அறியும் கடமை, ஒவ்வொருவருக்கும் உண்டு. ஏனெனில், இந்தியா, அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது! படத்தை மீண்டும் பாருங்கள்—அம்மைக்கு வலதுபுறம் நின்று, கூர்ந்து கவனித்துக்கொண்டிருப்பவர்தான், உலக பாங்க் தலைவர் பிளாக். அவருடைய கண்களிலே, ஏதோ ஓர்வித குறும்பு இருப்பதாகத் தெரிகிறது! ஏன்? கவலை தரும் காட்சி.

* * *

பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளும் போக்கு, ஆட்சியாளர்களுக்கு, இதுவரை இல்லை என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன—எனவேதான் கவலை அதிகமாகிறது.

* * *

இந்திய சர்க்காரின் 1950-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் படி, ஏறத்தாழ, 45-கோடி ரூபாய் துண்டுவிழுமாம்! இம்முறையில் இருக்கிறது நிர்வாகம். இவ்வளவு துண்டுவிழுமென்று எதிர்பார்க்கவே இல்லை என்றும், சில இலட்சமாவது மிச்சமே பிடிக்கக்கூடுமென்று எதிர்பார்த்ததாகவும். கூறப்படுகிறது. செலவு அதிகம், சிக்கனம் செய்ய வேண்டும், என்று கூறுகிறாராம், நிதிமந்திரி மத்தாய், மற்ற மந்திரிகளோ, இதுகூடச் செய்யாமல், மக்களிடம் சென்று மறுபடியும் எப்படி 'ஓட்டு' வாங்குவது என்று தேடுகிறார்களாம். ஒவ்வொரு மந்திரிக்கும் ஒரு ஒய்யாரத்திட்டம் தேவைப்படுகிறது! செலவுக்குப் பணம்தரவேண்டும் என்று வாதாடுகிறார்கள். நிதிமந்திரி புருவத்தை நெரிக்கிறார், மற்றவர்களோ, நெற்றியைச் சுளிக்கிறார்கள்—செலவை மட்டுப்படுத்த முடியாது என்கிறார்கள்

* * *

வரவு செலவு சரிக்கட்ட முடியாத நிலை! கடன்வாங்கும் நிலை! இந்த இலட்சணத்தில், சீமையில், ஏன் சிங்காரமாளிகை வாங்குவது? கல்வி மந்திரி அஜாத் சும்மா இருப்பாரா! மத்தியகிழக்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கலாச்சாரத் தொடர்புக்கான அமைப்பு ஏற்பாடு செய்கிறேன், ஆண்டுக்கு ஒரு இலட்சம் தர வேண்டும், என்கிறார்! இப்படி ஒவ்வொரு மந்திரியும்!! பிரதம மந்திரியோ, அட்லாசும் கையுமாக இருக்கிறார், எந்த நாடு பாக்கியாக இருக்கிறது, தூதுவர் நியமிக்க, என்ற எண்ணத்துடன். காஷ்மீர்களமோ, கண்ணை மூடிக்கொண்டு, பணத்தைக் குடித்தபடி இருக்கிறது! உணவுக்கு, வெளிநாட்டுக்குக் கொட்டித் தரும் பணமோ கொஞ்சமல்ல! அகதிகளின் ஆர்ப்பரிப்பை அடக்குவதற்கான செலவோ, அபாரம்! இப்படிச் செலவுமேல் செலவு!!

இந்த நிலையில் உள்ளவர்கள், இந்தியாவை அடமானம் வைத்துப்

பெருந்தொகை கடன்வாங்குகிறார்களே, என்பதை எண்ணும்போதுதான், உண்மையிலேயே பயம்கூட ஏற்படுகிறது!

*  *  *

அமெரிக்க 'டாலருக்கு' பிரிட்டிஷ் பீரங்கியைவிட, அதிகமான சக்தி இருக்கிறது என்பது, அகில உலக விவகாரம் அறிந்த அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. சர்ச்சிலின் கோபம், நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது, ஆனால் ட்ரூமனின் புன்சிரிப்பு......? அதிலே, என்னென்ன புதைந்திருக்கிறதோ, யார் கண்டார்கள்! யோசிக்க யோசிக்க, இந்தக் கடன்வாங்கும் போக்கு, கவலை தருவதாகவே இருக்கிறது. ஆட்சியாளர்களைப்பற்றியும், அவர்களின் போக்கு, திட்டம் பற்றியும், இதுவரையில், கவலைகொள்ளாமல் இருந்ததுகூட அதிகக் கேடுசெய்யக் கூடியதல்ல, இனியும் பொதுமக்கள் அவ்விதம் இருத்தல் கூடாது. இந்தியா, அடமானம்வைக்கப்பட்டிருக்கிறது. கடன் பத்திரத்தில், நேருவின் தங்கையின், கையொப்பமிருக்கிறது—காட்சி படமாக்கப்பட்டு, உலகுக்குத் தரப்பட்டிருக்கிறது! களிப்பூட்டும் காட்சி அல்ல! கவலை தரும் காட்சி. பொறுப்பைஉணர்த்த வேண்டிய படம்,—அது. இந்நிலையில், சீமையில் சிங்காரமாளிகையாம்! செச்சே! வேதனையும் வெட்கமும், சேர்ந்து தாக்குகிறது.

✽

# வயோதிகர் வாழ!

வயோதிகப் பருவம், வாழ்க்கையின் மாலை நேரம்! வசந்தகாலம் மாறி வயோதிகர்களானதும் மக்கள், வற்றிய ஆறுபோல ஆகிவிடுகின்றனர்—தள்ளாமை, முடியாமை ஆகியவைகளால். அந்த நேரத்தில் அவர்கள் விரும்புவது எல்லாம், மன நிம்மதியும், மனக்குறை இல்லாமையுந்தான். உலகில் 'வாழ்ந்துவிட்ட' அவர்களுக்கு, அந்திய காலத்தில் குடும்பத்தாரின் நலம், பேரப்பிள்ளைகளின் கொஞ்சுமொழிகள், வேண்டியவர்களின் சந்திப்பு. தேவையானது கிடைப்பது ஆகியவைகளின் திருப்தியால், மனநிம்மதி ஏற்படுகிறது. 'நமது குடும்பத்தார் நன்றாக இருக்கின்றனர். நமக்கு வேண்டியது, கிடைக்கிறது' என் அகமகிழ்ச்சியுடன் அவர்கள் காலம் நகருகிறது!

இந்த நிலை எல்லோருக்கும் இருக்க முடியும் என்று கூறிவிட முடியாது—வளம் இல்லாதவர்கள், வாழமுடியாதவர்கள் என்ற பேதம் இருக்கும் உலகில். அதுமட்டுமல்ல, செல்வம் நிறைய இருந்தாலும், சுற்றமோ, கிளைகளோ இல்லாத காரணத்தாலும், இன்பம் கிடைக்காது ஏங்குபவர்களும் உண்டு!

இக்குறை தீர்ப்பது எப்படி, என்பது பற்றி உலகில் ஆங்காங்குள்ள அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். அத்தகைய ஆராய்ச்சித் துறையில் பெரும்பணி ஆற்றுவது பிரிட்டனிலுள்ள 'நப்பீல்ட் ஸ்தாபனம்' ஒன்று. முதியோர் பிரச்னைக்கு முடிவு காணும், இந்த ஸ்தாபனம், பிரிட்டிஷ் 'மோட்டார் மன்னன்' என்று அழைக்கப்படும் நப்பீல்டு பிரபுவால், ஆறு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டதாகும். நாட்டு மக்களின் உடல் நலம், முன்னேற்றம் ஆகியவைகளை லட்சியமாகக் கொண்டு, அமைக்கப்பட்டதுதான் இந்த ஸ்தாபனம்.

இந்தஸ்தாபனத்தார் வயோதிகர் வாழ, எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் குறிப்பிடக் கூடியன. சுற்றத்தார் இல்லாமல், சுகம்பேணப் பிள்ளைகள் இல்லாதவர்களாக, தனியாக "எப்படி வாழ்வோம்?" என்று ஏங்கும் வயோதிகர்களின் வாட்டத்தைத் தீர்ப்பதற்காக, லண்டனுக்கருகிலுள்ள ஐலிங்டன் என்ற இடத்தில் அநேக விடுதிகள் அடங்கியஒரு பெரிய கட்டிடமொன்றைக் கட்டியுள்ளனர். இந்தக்கட்டிடம், சமீபத்தில் மேரி அரசியாரால் திறந்து வைக்கப்பட்டது. காற்றோட்டமும், வசதியும் நிரம்பிய கட்டிடம். இந்த மாடிக் கட்டிடத்தின் கீழ்ப்பகுதியில் வயோதிகர்களுக்கான, குடியிருப்பு வசதிகள் உள்ளன. மேல் பாகம் பலப்பல 'பிளாட்'டுகளாகப் பிரிக்கப்பட்டு, அங்கு சாதாரண குடும்பங்கள் வசிக்க, பிரித்து விடப்பட்டிருக்கின்றன. மேல் பாகத்தில் வசிப்பவர்கள், குழந்தை குட்டிகளுடன், குதுகலமாக இருப்பதால், கீழே தனியாக வசிக்கும் வயோதிகர்களுக்கும், தாங்கள் ஒரு குடும்பத்தில் வசிப்பது போன்ற இன்பமும், மணமும் நிம்மதியும் ஏற்படுகிறது. ஒய்வு நேரத்தில்.மேல் பகுதியிலிருக்கும் குடும்பத்தாருடன் பேசவும், பிரியங்காட்டவும் முடிவதால் முதியோர்கள் மனச்சாந்தியுடன் மகிழ்வு கொண்டவர்களாக இருக்கின்றனர் தனிமை என்ற சஞ்சலம் இன்றி அவர்கள், தங்களுக்கு வேண்டியவர்களுடன்இருப்பதாகவே எண்ணி இன்பம் பெறுவதற்கான, சூழ்நிலையில்அந்த இடம் அமைந்து இருக்கிறது.

இந்தத் 'துயர் போக்கும் மாளிகை'க்கருகிலேயே ஒரு மலர்ப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் ஓய்வு நேரத்தில், குழந்தைகளுடன், உல்லாசமாகச் சுற்றி வருவதற்காக. இந்த முதியோர்களுக்கு, அந்தக் கட்டிடத்தின் மேல் பகுதியில், ஒரு வேளை உணவு இலவசமாக அளிக்கின்றனர். வயோதிகப் பருவம், வாய்க்கு ருசி தேடும் அல்லவா! அதற்கும் அவரவர்கள் அறையில் விசேஷவசதிகள் உள்ளன.

உடல் நலக் குறைவு ஏற்பட்டு, யாராவதுஒருமுதியோருக்கு, காய்ச்சலோ, தலைவலியோ, திடீரெனவந்துவிட்டால், அவர், ஆயாசமுறவோ, 'யார் கவனிப்பார்கள்' என்று கவலைப்பட வேண்டியதில்லை. தன் அறையில் உள்ள ஒருபொத்தானை அழுத்த வேண்டியதுதான். இவர்களுக்காக அங்கு நியமிக்கப்பட்டிருக்கும் 'மேட்ரன்' நோயாளியின் அறையைத் தேடிக்கொண்டு வந்து விடுவார். கேட்க, கேட்க நாமும் வயோதிகர் ஆகிவிட்டால் என்ன என்று ஆசை எழும்புகிறதா? இந்த நிலை இங்கு அல்ல, பிரிட்டனில்! ஞாபகமிருக்கட்டும்!!

✽


# அறிவிப்பு

✽

எனது மகன் திரு. கிருஷ்ணமூர்த்திக்கும், விருதுநகர் திரு. எஸ். எஸ். நடராஜன் அவர்கள் மகள் திருமதி. லலிதாவிற்கும் 14-9-49 தேதி காலை 9-30-மணிக்கு விருதுநகரில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்
பட்டிவீரன்பட்டி.

# வாடாத் திருமேனிகள்!

மதத்தை ரட்சித்து, அதன் மூலம் மனித குலத்தை ரட்சிக்கும் திருப்பணிக்காகத் தங்களை அர்ப் பணித்துவிடத் தீர்மானித்துள்ளன ராம், முத்ராதிகாரிகள்.

முத்ராதிகாரிகள், என்பவர்கள், சங்கராச்சாரியாரிடம் சன்னத்துப் பெற்றுள்ளவர்கள். மதத்தைப் பரப்பி, மக்களின் மாண்பை உயர்த் துவது, இந்த மகானுபாவர்களின் அலுவல்.

சங்கராச்சாரியாரின் பவனி, அவ ருக்குப் பாதகாணிக்கை குவிவது, செல்வம் படைத்த மிராசுதாரர் களைச் சீடர்களாக்குவது போன்ற சத்காரியங்களிலே', மெத்தப்பழக்க முள்ளவர்கள், இந்த வாடாத் திரு மேனிகள்.

இவர்கள் அறியாத வேத புராண சாஸ்திர இதிகாசம் இல்லை.

இவர்கள் பேசாத தத்துவம் கிடையாது. எல்லாம் தெரியும் இவர் களுக்கு, ஏழையின் துயரம் தவிர!

ஏழைக்குத் துயரம் வரத்தான் செய்யும் — பகவான் சோதனை— என்பதுதான், இவர்கள் அறிந் துள்ள பரிகாரம்.

இப்போது, மக்களுக்கு, வாழ்வு ஒரு சுமைபோலாகி விட்டது. நமது பக்தியிலே ஒரு குறையும் காண முடியாதே! நோன்பு, விரதம், பூஜை முதலிய எதிலும் நாம் தவறு ஏதும் செய்வதில்லையே! யார் என்னவித மான அக்ரமம் செய்தாலும், ஆண் டவன் இருக்கிறார் அவனவனுக்குத் தக்கபடி தண்டனை தர, என்று தானே மனதார நம்பி வருகிறோம். அப்படி இருந்தும், ஏழை புழுப் போலத் துடிக்கிறான்—செல்வவான் களி எனச் சிறுகிறான் — குருவோ, பொறுமையைப் போதிக்கிறார் — இவ்விதமான நிலைமை இருக்கிறதே! அப்படி, நம்மைப் பிறர் நசுக்கக் கூடும், வாளாஇருக்கும் போக்குத் தானு, அனுதரட்சகனுக்கு!!

அவன் பெருமையை அனவரத மும் எடுத்துரைக்கும், மதத்தினால் நாம் கண்ட பலன்தான், என்ன? — என்ற எண்ணம் பரவி வருகிறதல்லவா!

பழையபடி பஜனையில், பாராயணத் தில், பாதபூஜைசெய்வதில்பல்லக்குச் சுமப்பதில், பாமரருக்கும், முழு மனம் செல்வதில்லை.

பழக்கத்தால், பயத்தால், ஏதோ சில பல, மதச் சடங்குகள் செய்து வருகின்றனர் — ஆனால் அந்தப் பழைய 'பிரேமை' இல்லை. பாமரரின் பக்தி மங்குவதனால், நஷ்டமடை பவர்கள் பலர் உண்டல்லவா?

கோயிற் பூனைகளுக்குக் கோபம்! மதத்தை மீண்டும் செல்வாக்கடை யச் செய்யவேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டு, பலர், பல்வேறு வகையான, பிரச்சார முறைகளைக் கையாள்கிறார்கள், பாமரரை, வலை யில் விழச் செய்ய. முத்ராதிகாரி கள், தமக்கு முன்பு இருந்துவந்த செல்வாக்குடன், இன்றைய நிலை மையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஓலமிடலாமா என்றுதான் தோன்றும்.

ஒரு காலம் இருந்ததல்லவா, சுய மரியாதைச் சூறாவளி கிளம்பாத காலம், அப்போது, எவ்வளவு செல்வாக்கு; இலட்சாதிகாரிகளும், பிட்சாதிகாரிகளும், போட்டி போட் டுக்கொண்டு வருவர், பக்திசெலுத்த! பணம் குவியும்! கட்டளையை எதிர் பார்த்து, கைகட்டி வாய் பொத்தி நிற்பர், மக்கள்! இன்றோ—'ஏனோ தானோ' என்ற போக்கில் பலர்.

எதற்காக ஏமாளியாகவே இன்ன மும் இருக்கிறோம்!—என்ற ஏக்கம் கலந்த கேள்வி, சிலருடைய மனதில்.

எல்லாம் தெரியுமப்பா! — என்ற துணிச்சல் பேச்சு, சிலரிடம். காலம் மாறிவிட்டது — காரியம் மிகவும் மோசமாகி விடுமுன்பு, ஏதாவது செய்து, சரியும் செல்வாக்கைச் சரிப்படுத்த வேண்டும், என்று 'சத்புருஷர்கள்' யோசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

கும்பகோணத்துக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ள கல்லூர் எனும் கிராமத்தில், சென்ற ஞாயிற்றுக் கிழமை, முத்ராதிகாரிகள் முகா மிட்டுப் பேசினராம்.

மதம் இல்லையேல், மனிதன் இழி நிலை அடைந்துவிடுவான் — எனவே மனித குலத்தின் வீழ்ச்சியைத் தடுக்க, இனி நாம், மதத்தின் மாண் பினை எடுத்துத் தக்கவிதத்திலே, பிரசாரம் செய்யவேண்டும், என்று, இந்த முத்ராதிகாரிகள் தீர்மானித் தனராம்.

தூய்மையான, சிலாக்கியமான கருத்துகள், மனதிலே தோன்ற வேண்டுமாம்—அந்தத் திருப்பணி யிலே அவர்கள் ஈடுபடப் போகிறார் களாம்.

களஞ்சியத்தில் நெல்லைக் கொட்டி விட்டுக்குடிசைக்குள் நுழைந்து, கூழ் பருகும்போது, குடியானவன், மன திலே, தூய்மையான, சிலாக்கியமான எண்ணந்தானே உண்டாகும்!!

வயலை, உழ மறுத்து வாடவிட்டு, குடிசைக்குள் இருந்துகொண்டு, வேலைநிறுத்தம் செய்யும் குடியானவ னிடம், அவன் உழைப்பைத் தலை முறை தலைமுறையாக உண்டு ருசி கண்ட, பண்ணை முதலாளியின் மன திலே, சிலாக்கியமான, தூய்மையான எண்ணம்தானே உண்டாகும்!

சேற்றிலே சந்தனம் காணக்கிளம் புகிறார்கள் இந்தச், சத்புருஷர்கள்!!

வாழ்க்கையிலே, ஏழை மக்கள் அடையும் ஆயிரம்இன்னலையும், ஒரு பாசுரத்தால், ஒரு சுலோகத்தால், மயக்கும்படி செய்து விடலாம், என்று மனப்பால் குடிக்கிறார்கள்.

ஏழையின் மனதிலேயும் சரி, அவனை அடக்கி ஆளும், மேட்டுக் குடியினரின் மனதிலேயும் சரி, தூய் மையான எண்ணம், தோன்றாது— நிச்சயமாக—ஏனெனில், ஒருவரை ஒருவர் சுரண்டி வாழும் நிலைமை யில்,சமுக, பொருளாதார அமைப்பு

இருக்கும்போது, மனம், எரிமலையாக இருக்குமேயன்றி, 'சத்விஷயங்களைக் கொண்ட சொர்ணப் பேழையாக' இருக்கமுடியாது.

பால்வேண்டி அழுகிற பாலகனிடம், கோகிலகானம் சென்று பாடினாலும், பலன் இராதே! பசியல்லவா தீரவேண்டும், குழந்தைக்கு!!

இது தெரியாதா, முத்ராதிகாரிகளுக்கு?—தெரியும்!—தெரிந்தும், ஏன், 'திருத்தொண்டில்' ஈடுபடப் போவதாகக் கூறுகிறார்கள்? 'ஒரு சான்ஸ்' பார்க்கலாம், என்ற ஆசை.

இந்தஆசை இப்போது, பலருக்கு ஏற்பட்டுவிட்டது. புராதன மதம்—பழைய பண்பாடு—மதமேம்பாடு—பகவத் பக்தி—எனும் சொற்களைக் கொண்டு, செப்பிடு வித்தை செய்யக் கிளம்பியுள்ளனர், பலர்; சாதுக்கள் கோபவேசத்துடன் கிளம்புகின்றனர்! தவசிகள், தவக் கோலத்தைக் கலைத்து விட்டு வருகின்றனர்!

'பாரத்வர்ஷத்தின்' பெருமை, பாழாகக் கூடாது! சுயராஜ்யத்திலே, நாஸ்திகம் பரவுகிறது! இது பெரிய ஆபத்து. நமது புராதன மதம், நாசமாகிவிடக் கூடாது பண்டைய கலாச்சாரம் பட்டுப்போனால், சகலமும் கெட்டுப் போகும், என்று, பிரலாபிக்கின்றனர்.

அடுத்த தேர்தலின்போது, இந்த 'ஓலத்தை'யே மூலதனமாகக் கொண்டு, அரசியல்சூதாட்டம் நடத்தவும் சிலர் திட்டமிட்டு வருகின்றனர்.

நமது மார்க்கம் காப்பற்றப்பட வேண்டும்—நமதுகலாச்சாரம் நிலைத்திருக்கவேண்டும்—என்ற முழக்கம், பலமாகிறது.

இதிலோர் பகுதிதான், இந்த முத்ராதிகாரிகளின், முகாமில் கிளம்பிய முணுமுணுப்பு.

பண்டித ஜவஹரும், இத்தகைய குறுகிய மனப்போக்கை, குருட்டுப் பிடிவாதத்தை, அர்த்தமற்ற கூச்சலை, நடைமுறைக்கு ஒவ்வாத ஆவலை, உலகை உதாசினம் செய்யும் உளுத்தரின் போக்கைக் கண்டித்திருக்கிறார். எனினும், என்றோ ஓர் நாள், இவர்களின் கூச்சல் அதிகமாகிக் காது குடையும்போது, ஜவஹர் போன்றோர், இடித்துரைக்கின்றனரே யொழிய, மற்றக் காலங்களில், இவர்களின் மனதிலே பழைய சம்பிரதாயத்தை மீண்டும் நிலைநாட்டி விடக் கூடும் என்ற நம்பிக்கை ஏற்படும்படியான காரியங்களையே செய்கின்றனர்.

சுதந்திரத்தைப் பெறுவதற்கு, நட்சத்திரம் சரியாக இருக்கவேண்டும் என்று, ஆரூடம் பார்த்து, நள்ளிரவே அதற்கு ஏற்ற நேரம் என்று ஏற்பாடு செய்தனர், உலகமறிந்த ஜவஹரே, இந்த விசித்திர ஏற்பாட்டுக்கு இணங்கின போது, ஏன் பழையபாசி துளியும் போகாத முத்ராதிகாரிகளுக்கு, 'ஆசை' பிறக்காது—கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டால், மீண்டும் முன்னணி வரக்கூடும், என்ற 'ஆசை' ஏற்படத் தான் செய்யும்.

கனடா நாட்டு அரசியல் திட்டத்தையும், ஆஸ்திரேலியா நாட்டுத் திட்டத்தையும் ஒரு புறம் ஆராய்ந்தறிந்து, இந்நாட்டுக்கு அரசியல்திட்டம் தயாரித்துக் கொண்டே, மற்றோர் புறத்தில், சுதந்திர விழாக் கொண்டாட்டத்துக்காக, விஷ்ணு, பிரம்மா, தில்லைச்சபேசன், போன்ற கடவுளரின் உருவம் பொறித்த தபால் பில்லைகளை வெளியிட்டால், ஏன் முத்ராதிபர்களுக்கு, 'சபலம்' ஏற்படாது!

எனவேதான் அவர்கள், பிரச்சாரம் புரிய முடியும், என்றுநாப்பறை அறைகின்றனர். நாடுஏற்காது அவர்களின் பேச்சை, எனினும், அவர்களின் ஆசை அழியா மறுக்கிறது.

பார்லிமெண்ட் கூடுகிறது என்ற பேச்சுடன் இணைந்து பஞ்சாங்கம் பார்க்கப்படுகிறது என்ற பேச்சும் இருக்கிற காரணத்தால், இந்தப் பழைய பசலிகளுக்கு இவ்வளவு துணிவு ஏற்பட்டுவிட்டது.

குடந்தை அருகே கூடிய இந்த மாநாட்டின், இலட்சணம் இருக்கிறதே, அதைஎண்ணினாலும், அடக்க முடியாத சிரிப்பு வரும்— கூடிப் பேசினவர்கள் யாரார் தெரியுமோ!

விஸ்வநாத சாஸ்திரியார் தலைமை வகித்தார்.

மணி ஐயர், ஆண்டு அறிக்கை படித்தார்.

மகாலிங்க ஐயர். கோபாலதேசிகாச்சாரியார், வரதராஜ ஐயங்கார், ராமமூர்த்தி சாஸ்திரி ஆகியோர், 'உபன்யாசம்' செய்தனர்.

கோபால ஐயர், 'வந்தனோபசாரம்' கூறினார்!

கேட்டு ரசித்தவர்கள், குப்பணய்யங்கார், கோவிந்தாச்சாரியார், சீனுவாசாச்சாரி, சோமசுந்தரக் குருக்கள், கச்சாலீஸ்வர ஐயர், என்று இல்லை—காரணம், பெயர் வெளியிடப்படவில்லை!

மகாநாட்டின் அழகு எப்படி இருந்திருக்கிறது, பார்த்தீர்களா!

இவர்களுக்குத்தான், இந்த 'பாழாய்ப்போனஜனங்கள்' மதத்தை மறந்து, நாசமாகிக் கொண்டு வருகிறார்களே, இதைக் கண்டும் எப்படிச் சும்மா இருப்பது, என்ற உள்ளத்துடிப்பு ஏற்பட்டு விட்டதாம்! என்ன அக்கரை! எவ்வளவு அனுதாபம்!!

ஐயர், சாஸ்திரி, ஆச்சாரியார் என்போராக இருந்தாலும் சரி, தேசிகர், ஓதுவார் என்பவர்களானாலும் சரி, முதலியார், பிள்ளைவாள், என்பவரானாலும்சரி, கட்டுக்கட்டாக விபூதி பூசிடும் சைவரானாலும் சரி, பட்டைநாமம் தீட்டிக்கொள்ளும் வைஷ்ணவ சிகாமணிகளானாலும் சரி, மதவாதிகள்யாராக இருப்பினும், பட்டினியுடன் போராடிக் கொண்டிருக்கும் மக்களிடம் சென்று, 'மாயாஜாலம்' செய்து கூட இனித் தமது பழைய செல்வாக்கைப் பெற்றுவிட முடியாது.

பாடுபடுபவனைப் பட்டினிபோட்டு வாட்டுபவனை விட்டுவைக்கும் மதத்தை அவர்கள், மதிக்க மறுக்கிறார்கள். பக்திமான் வேஷமிடும் பணந்தேடிகளுக்கு இடமளிக்கும் மதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முன்வினை, தீவினை என்று பேசி, ஏழைக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு, எதைஎதையோ காரணமாக்கிக்காட்டிடும் கபடத்தை அவர்கள் இனி மதம் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! வாடாத திருமேனிகள், வீண் வேலையில் ஈடுபடுகிறார்கள்! பலிக்காது!!

★

## ஒருவிடிவிளக்கு

# ஆங்கெலினு

[ அரங்கண்ணல் ]

"ஏர் உழுகிருளாமே ஏர்! என்ன விவஸ்தை கெட்ட ஜென்மம்"

"வெட்கம், மானம், சூடு, சொரணை இருக்கா. அது பெண்ணல்லப்பா பேய்!"

"கொஞ்சங்கூட கூச்சம் நாச்சம் இல்லையே."

"எப்படியப்பா, இருக்க முடியும்? அவர்கள் குடும்பமே அப்படித் தானே! இல்லாவிட்டால் அவள் அப்பன் இவளை இப்படி விடுவானு!"

"இவள் போக்குக்கு ஒண்ணுமே சொல்றதில்லையாமே, அவள் அப்பன்?"

"அவன், ஏம்பா சொல்ருன். இப்படித்தான் எல்லாப் பெண்ணும் ஆகணும்னு அவளோட அண்ணன் கூட சொல்ருனும்!"

"சே, சே மானமே மலையேறுதப்பா. நம்ப கிராமத்துப் பேரே ப்பலேறுது. இப்படியே விட்டா ஒண்ணும் உருப்படாது!"

இப்படியெல்லாம் அவளைப் பற்றித் தூற்றினர் அந்த ஊர் மக்கள். பெண்ணல்ல பேய், இவளால் ஊருக்கே ஆபத்து வரப்போகிறது, கடவுளுக்கேற்காது, கட்டாயம் அனர்த்தம் விளையும், ஊரைக் குட்டிச் சுவராக்குகிருள், ஊதாரி, உருப்படாதது! ஒன்றுக்கும் உதவாதது! ஓடுகாலி! என்றெல்லாம் ஊரார் அவளுக்கு 'பட்டங்கள்' வழங்கினர்!

இத்தனைக்கும் அவள் யாரையும் திட்டுக்கூடப் பார்த்ததில்லை. 'ஏன்' என்றுகூடக் கேட்டதில்லை. அதற்கெல்லாம் அவளுக்கு நேரமே இருப்பதில்லை. காலையில் எழுந்து கலப்பையைப் பிடிப்பது, கவலை மறந்து பாடிக்கொண்டே கழனியை உழுவது, ஓய்வுநேரத்தில் தன்னொத்த தோழர்களுடன் கழனி, கலப்பை பற்றி பேசுவது என்றுதான் இருந்தாள். ஊரார் ஏச்சும், சுற்றியிருப்போர் பேச்சும் அவள் காதில் எட்டும். அவைகளைக் கவனிப்பது கூட இல்லை — வீண் வேலை என்று கருதி. இருந்தும், அவளைக் கண்டாலே ஆத்திரம் வந்தது, மனம்போன போக்கில் திட்டினர், மானமற்றவள் என்றனர், மரியாதை கெட்டவள்எனக் கூறினர், மனதில் பயத்தைஉண்டாக்க முனைந்தனர்— இவையெல்லாம், அவளை அசைக்கவில்லை. இவைகள், அவளை அஞ்சவோ, அயரவோ, செய்யவில்லை. அவள்தான் இலட்சியப் பறவையாயிற்றே!



ஆங்கெலினு, தன்து மூன்ருவது குழந்தை ஸ்டாலினுவுடன்.

ஒருநாள் அவளுக்கும் அவள் சகாக்களுக்கும் ஓரே ஆனந்தம் விளைவித்த விதை பயன் தந்து, அறுவடை கண்டால், ஏழை நிதிக் குவியலைக் கண்டபோது ஏற்படும் இன்பம் எழும்பாமலா இருக்கும்! ஓரே எக்களிப்பு அவளுக்கு. தானியத்தை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தனர். திடீரென்று, வேகமாகக் காற்று வீசியது. மின்னலும், தூற்றலும் எழும்பவே, இடியோசையுடன் காற்று புயல் என எழும்பிற்று, அவளோ, தானியத்தை ஏற்றிக் கொண்டு, வண்டியின் மீது இருக்கிருள் — இந்நிலையில் கடுங்காற்று அவளை தள்ளிவிட்டது. நின்றுகொண்டிருந்த அவள், சமாளிக்க முடியாமல், சாய்ந்தாள். அது போதாதா அந்த ஊர் மக்களுக்கு. ஒன்றுமில்லாத வாய்க்கு அவல் கிடைத்தது போலாயிற்று!

'என்ன இருந்தாலும் கடவுள் விடுவாரப்பா?'

'அவருக்கே பொறுக்கவில்லை. திடீரென காற்றை உண்டாக்கி அவளைக் கீழே விழச்செய்தார்'

'இல்லாவிட்டால் அவள் ஏன்விழுகிருள். எல்லாம் கடவுளின் கோபம் தான்!'

இப்படி, பல கதைகள் கட்டிவிடப் பட்டன. எங்கும் இதே பேச்சுதான். இப்படிப் பேசித் திருப்திப் படுவதிலே, அவளுக்கு அல்லல் ஏற்பட்டது என்று அறிவதிலே, ஒரு ஆனந்தம் அவர்களுக்கு!

இத்தனைக்கும் அவள் யாருக்கும் எந்தவிதமான இடைஞ்சலும் செய்ததில்லை. எண்ணத்தில்கூட எழும்பியதில்லை, அவளுக்கு, இந்த நினைப்பு. இருந்தாலும் அவர்கள் தூற்றல் படலம் ஓய்ந்தபாடில்லை. ஒருநாள், ஒரு வேளை, ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது 'ஏதாவது' இவளைப் பற்றிப் பேசினுல்தான், 'ஒரு வேலை' செய்துமுடித்தது போன்ற திருப்தி -அவ்வளவு தூரம் அவளை வெறுத்தனர், சபித்தனர், சண்டாளி என்றனர்! இத்தனை 'பாணங்கள்' தன்னை நோக்கி பறக்கும்படி, அவள் செய்த குற்றம்—கலப்பையைப் பிடித்து கழனியை உழுததுதான்! அதற்குத்தான் அத்தனை ஆவேசமும், ஆத்திரமும் எழும்பியது அவர்களிடம். அவளோ பெண்! பெண் ஆணைப்போல கலப்பையை யோட்டி கழனியைத் திருத்தி விளைச்சலிடுவதென்ருல்! வீட்டு வேலையுண்டு தானுண்டு என்று இருக்கவேண்டியவள் வெளியிலே புருவெனத் திரிவதும், சாகுபடி

செய்வதும் என்றால்! அன்றயை ரஷ்யாவிலே அது ஆத்திரமூட்டக் கூடியது மட்டுமல்ல, அருவருக்கத் தக்கதாக, ஆபாசமானதாக, செய்யக் கூடாத காரியத்தைச் செய்வதாகக் கருதப்பட்டது.

* * *

1930! ரஷ்யப் புரட்சி நடந்து, புதுஉலகப் பாதையில் பதின்மூன்று ஆண்டுகள் நடந்து வந்துகொண்டிருந்தும்—ரஷ்ய பாமர மக்களின் மூட நம்பிக்கை இருள் மறைந்து போய்விடவில்லை. பழைமை மோகம் அவர்களைத் தன் பாச வலையில் விடாப்பிடியாக, வைத்திருந்தது. வழக்கம், இதுவரை இப்படித்தான் எங்களவர் செய்வர், இதுதான் பழக்கம் என்ற சம்பிரதாய ஆசை தளராமலிருந்தது. அப்போது, ஒரு பெண், கலப்பைப் பிடிக்கிறாள், அதுவும் இயந்திரக் கலப்பையை ஓட்டுகிறாள், என்றால், அறிவுமணம் அறியா அவர்களுக்கு ஆத்திரம் எழும்பியதில் ஆச்சரியமென்ன!

இன்று கூட, நம் நாட்டுப்புறங்களில், ஒரு இளம் பெண், செருப்புப் போட்டுக் கொண்டு போனால், "வயது வந்தவர்கள்" பேசுகிறார்களல்லவா, 'பாரய்யா கலிகாலத்தை. பக்குவமடைந்த பெண் — பதினெட்டு வயதாகிறது. 'பசு' போல வீட்டிலிருக்க வேண்டியதை விட்டுவிட்டு, கொஞ்சங்கூட கூச்சம், மரியாதை இல்லாமல், 'டாக், டாக்' என்று போவதை' என்று! அதே நிலைமைதான், அன்று, அங்கு.

இன்ன நாளில் தான் விதை, விதைக்க வேண்டும், இந்த நேரத்தில் தான் முதன் முதலில் வயலில் இறங்கவேண்டும். மழை பெய்யவில்லையா, கடவுள் கோபங்கொண்டுவிட்டார். காற்றுகொஞ்சம் கடுமையாக வீசுகிறதா, யாரோ கடவுளுக்கு கோபமூட்டி விட்டான் —என்றெல்லாம் நம்பிக் கிடந்தனர் ரஷ்ய மக்கள் பாரை உலுக்கிய பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்து பல ஆண்டுகள் சென்றிருந்தும்கூட! 1917 புரட்சியின் விளைவாக அரசியல் துறையில் முதலாளித்துவத்தை முறியடிக்க முடிந்ததே தவிர, முதலாளித்துவ 'முதலை'களையும் அவர்கள் வசம் சிக்கிக் கிடந்த, வளமை வாய்க்கால்களான, தொழில்கள், ஆலைகள், பாங்கிகள் ஆகியவைகளையெல்லாம் வசப்படுத்தவும், நிலப்பிரபுத்துவத்தின் நீண்ட கோரவாயிலிருந்து ஏழை விவசாயிகளை மீட்கவும், எண்ணற்ற நாட்கள் பிடித்தன. இவை ஒவ்வொன்றையும் சாதிக்க, சோவியத் அரசாங்கம், மகத்தான காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பெரும்பாலும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டநாடு ரஷ்யா. விவசாயமோ, குலாக்குகள் —பெரும் பண்ணைக்காரர்கள்—கையிலிருந்தது. ஏழை விவசாயமக்களோ, அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக, அவர்கள் தயவில் வாழ்பவர்களாக இருந்தனர். இந்நிலையில், குலாக்குகளின் கொடுமைப் பிடியிலிருந்து விடுவிக்கவும், அவர்களின் கோலாகல வாழ்வை வீழ்த்தவும், விடுதலைப் பாதையில் விவசாயிகளை நடாத்தவும், சோவியத் அரசாங்கம் முனைந்து 'கூட்டுப் பண்ணை' முறையை நடத்தினர். எங்கும் கூட்டுப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்படுத்தப்பட்டன, என்று இன்று ஒரே வார்த்தையில் நம்மால் கூறமுடிகிறது. ஆனால், அன்று அதற்கு எழுந்த ஏச்சும் பேச்சும், எதிர்ப்பும் ஏராளம். பெரும்பண்ணைக்காரர்களான குலாக்குகளிடமிருந்து மட்டுமல்ல, ஏழைக் குடியானவர்களிடமிருந்துகூட எதிர்ப்புகள் எழும்பின. குடியானவர்கள் வசமிருந்த சிறு, சிறு வயல்களையெல்லாம் பொதுவான பெரிய வயலாக ஆக்கி, அவைகளை இயந்திரக்கலப்பை, முதலிய நவீனகருவிகள் கொண்டு சாகுபடி செய்யவேண்டும் என்பதுதான் கூட்டுப்பண்ணையின் முக்கிய குறிக்கோளாகும்.

சிறுவயலாக இருந்தால் இயந்திர வசதிகள்கொண்டு சாகுபடி செய்ய இயலாது. எனவே, வரப்புகளை நீக்கி, பெரிய வயல்களாக ஆக்கவேண்டியிருந்தது. ஆனால் சிறு வயல்களோ, குடியானவர்களின் கையிலிருந்தது. 'அவர்களுடையது' என இருக்கும் அவைகளை பொதுவானதாக ஆக்குவதென்பது, அவ்வளவு சாமான்யமானதாக இல்லை. ஆட்சி கையிலிருந்தது என்றாலும், ஒரே உத்தரவுமூலம் நடவடிக்கை எடுக்க முடியுமென்றாலும், காயை அடித்துக் கனியாக்க விரும்பவில்லை சோவியத் சர்க்கார், இதனால் காய் கனியாக முடியாது, கன்னிப்போய் விடும்—கலவரம் ஏற்பட்டு இலட்சியம் 'கானல்நீர்' ஆகிவிடும் என்பதால்! எனவே படிப்படியாக மக்களின் மனப்பண்பை மாற்றும் மகத்தான பணியை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

'இம்முறை நமக்கேன்' என்றனர் பலர். 'வீண் தொல்லை எதற்காக' என்றனர் ஒரு சாரார். 'ஆசைப்பட்டவர்கள் செய்துபார்க்கட்டும். சரிப்பட்டு வந்தால் நாமும் பின்னால் சேர்ந்து கொள்ளலாம்' என்றனர் சந்தேகப் புத்தியினர். 'கூட்டுப் பண்ணை முறை தேவையா, தேவையில்லையா?' என்ற விவாதத்தில் இறங்கினர் விதண்டாவாதிகள், குலாக்குகளோ, நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, குதர்க்கத்தனங்களில் ஈடுபட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஆங்கேலினா—ஒருபெண், கூட்டுப் பண்ணையில் இறங்கி ஏர்பிடித்து உழுகிறாள் என்றால் அவள்மீது தூற்றலும், கோபமும், கொடுமைகளும் தூவப்பட்டதில் வியப்பென்ன!

* * *

டிராக்டர்— இயந்திரக்கலப்பை— கொண்டு கூட்டுப்பண்ணைகள் சாகுபடி செய்யப்பட்டன. டிராக்டர் முதல் முதல் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டபொழுது, மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த மக்கள் கூட்டுப்பண்ணை முறையை எதிர்த்தது போலவே இதையும் வெறுத்தனர், 'வயலில் இறக்கப்பட்டால் வராதது, வரும்!' என்று பயமுறுத்தினர், 'தொட்டால் பாபம்' என்றனர். ஆனால் இன்றோ, அவர்களின் இருதய கீதம் — அதுதான். நாட்டுப்புறத்தினருக்கு நல்வாழ்வு நல்கிய 'கற்பக விருட்சம்' டிராக்டர் தான். பஞ்சம், இல்லாமை, உணவுப்பொருள் இல்லையே என்ற ஏக்கம், ஆகியவைகளின் மத்தியில் உழன்று கிடந்த மக்கள்—அன்று டிராக்டரைவெறுத்தனர், பழமை மாறுகிறது என்ற காரணத்துக்காக. ஆனால், இன்றோ அதுதான் அவர்களின் கவலையைப் போக்கி, ஏக்கத்தை விரட்டியடித்து இன்ப பூமியில் இருப்பவர்களாக ஆக்கிவைத்திருக்கிறது. கூட்டுப் பண்ணைகள், வெற்றிபெற, ரஷ்ய

னியக்களஞ்சியமாக ஆகச்செய்
து அதுதான். இந்த மகத்தான
ணியில் எண்ணற்ற இளங்காளை
ள், இறங்கி, எதிர்த்தவர்களை யெல்
ாம், ஏற்கும்படிச் செய்யமுனைந்த
ர். இதன் விளைவாக கூட்டுப்
ண்ணைகள் ஆங்காங்கு அமைக்கப்
ட்டுக்கொண்டிருந்தபோது,மூன்று
ண்டுகளுக்குள் மட்டும் மொத்
ம் 60,000 டிராக்டர்கள் ரஷ்யா
முழுமையுட இருந்தன; இவ்வளவு
ராக்டர்களையும் வாலிப வீரர்கள்
ான் ஓட்டினர். ஆண்கள்தான்
ந்த வேலைக்கு லாயக்கானவர்கள்,
வர்களால்தான் முடியும் என்று,
ட்டுப்பண்ணைகளைச் சேர்ந்தோரும்
ம்யூனிஸ்டுத் தொண்டர்களுங்கூட
ருதினர்! சோவியத் அதிகாரிகளி
டயேகூட அந்த எண்ணம்தான்
ப்போது இருந்தது.

கூட்டுப்பண்ணைக்கு எதிர்ப்பு,
ராக்டா கூடாது என்று ஆட்
சபம், அதை ஆண்கள் மட்டுமே
ட்டமுடியும் என்ற எண்ணம்.

அப்போதைய ரஷ்யாவின் நிலை
து!

'வீட்டில் கிடப்பதே பெண்களின்
மை' என்று கருதப்பட்டகாலம்.
லர்குலத்தைச் சேர்ந்தவர்கள்
ண்கள், மறச்செயல் அவர்களால்
டியாது, அதற்கு தகுதியற்றவர்
் என்று சாதாரண மக்கள்மட்டு
ன்றி, சமத்துவம் பேசுவோர்
ை எண்ணியிருந்தநேரம். எனவே
ான், ஊர்மக்களிடமிருந்து, தூற்
லும், எதிர்ப்பும் ஏளனமும் எழும்
து ஆங்கெலினு டிராக்டர்—இயந்
ரக்கலப்பை—பிடித்து உழுகிறுள்
ன்றதும். பாமரர்கள் மட்டுமல்ல,
், சீர் பெறபாடுபடும் கட்சித்
ொண்டர்கள் கூட ஆங்கெலினு
ாக்டர் ஓட்ட முனைந்து, தன்
சையைக் கூறியபோது சிரித்
னராம்!

* * *

ஆங்கெலினு — உக்ரேனில், ஸ்டா
ன் மாகாணத்தைச்சேர்ந்த
ாரோ பைஷேவோ என்ற
ாமத்தில் பிறந்தவர் — வளர்ந்த
— வசித்து வருபவர். இவர்
ைபெயர் ஆங்கெலின் நிகிடா
ஸிலீவிச். தாய் பெயர் ஆங்கே
ு யேவீமியா பியோடா ரோவ்னு
1912-ல் அவர்களுக்கு ஆங்கெலினு,
பிறந்தாள். அவளுக்கு அவர்கள்
வைத்த பெயர் ஆங்கெலினு பிராஸ்.
கோவ்யா நிகிடிச்னு என்பது. தந்தை
யரைப்போலவே, இவளும் தன்னு
டைய எட்டாவது வயதில் குலாக்
கிடம் அடிமை வேலைக்கு அமரும்
படியாயிற்று. தாய், தந்தை, சகோ
தரர்கள், எல்லோருமே அடிமை
களாய் உழைத்து, உருக்குலைந்த
தால்தானே, என்னவோ, கூட்டுப்
பண்ணைமுறை வந்ததும் அவர்கள்
குடும்பம் முழுதும் அதைஆதரித்து
வரவேற்று, அதன் வெற்றிக்காகஅல்
லும்பகலும்பாடுபட்டது. ஆங்கெலி
னுவின் மூத்த அண்ணனுன ஐவான்
டிராக்டர் டிரைவராக அமர்ந்தான்.
அண்ணன் டிராக்டர் ஓட்டுவதையும்
டிராக்டர் பூமியைக் கிழித்துப்
போகும் அழகையும் தினம் நின்று
கவனிக்கும் அவளுக்குப் அண்ண
னைப்போல்நாமும்ஓட்டினுல் என்ன?'
என்ற ஆசை, எழும்பி, அணு அணு
வாகத்துளைத்தது. 'அந்நாள் எந்
நாள்?' என்ற ஆர்வத்துடன் அவள்
இருந்துவந்தாள்.

இந்நிலையில் அந்த வட்டாரத்தி
லேயே முதல் டிராக்டர் டிரைவராக
பணிபுரிந்த ஐவான், சர்க்காரால்கூட்
டுப்பண்ணைப்பற்றிய மேல்விவரங்
களை அறிந்துவருவதற்காக வெளி
யூருக்கு அனுப்பப்பட்டான். அவன்
தினசரி ஓட்டும் டிராக்டரோ, தொடு
வாரற்று கிடந்தது. எதற்கும் உத
வாதுகிடக்கும் டிராக்டரைக் கண்ட,
ஆங்கெலினுவின் ஆசைவரவர,அதிக
மாயிற்று. தன் அண்ணனுக்குப்
பதில் வேறுயாரையும் அதிகாரிகள்
அனுப்பாமலிருப்பதைக்கண்ட, ஆங்
கெலினுவின் ஆர்வம் அதிகரிக்கவே
ஒருநாள் அதிகாரிகளைச் சந்தித்து,
'தன் ஆசையைச் சொன்னுர்! அவர்
களும் அரைமனதோடு ஆகட்டும்.
செய். ஆனுல் ஜாக்கிரதை!', என்று
எச்சரித்தனர்.

"தாங்கமுடியாத சந்தோஷம் வந்
தது அவளுக்கு! ஓடினுள், டிராக்டர்
மீது உட்கார்ந்தாள். முதல் முத
லாக டிராக்டரை ஓட்ட ஆரம்பித்
தாள்!

ரஷ்யாவிலேயே முதல் முதல்
டிராக்டர் ஓட்டிய பெண். ஆங்கெலி
னுதான்! 60,000 பேர்களில் அவ
ளொருத்திதான் பெண்!!

ஆகவேதான் ஆரம்பத்தில் குறிப்
பட்டதுபோன்ற ஏளனமும் எதிர்ப்
பும் ஏற்பட்டது அவளுக்கு. ஆனுல்,
அவளோ பெறமுடியாத பொக்கிஷத்
தைப்பெற்றதுபோல மகிழ்ந்துஇருந்
தாள். தன்னுடைய டிராக்டரை—
அதன்பெயர் (Fordson)—குழந்தை
யைத்தாய் பேணுவதுபோல் கவ
னித்துவந்தாள். எப்பொழும் அவ
ளுக்குதன் டிராக்டரைப்பற்றியஞாப
கம்தான்! நண்பர்களுக்கோ அவள்
ஓட்டுவாளா அவளால் முடியுமா
என்ற அவநம்பிக்கை. பாமரரோ
அவளைப்பற்றி, தூஷணை கிளப்பு
வதிலேயே இருந்தனர். பாதிரிகளோ
'வெட்கங்கெட்ட அவள்மீது காரித்
துப்புங்கள்!' என்று வயதானப்
பெண்களை வேறு தூண்டிவிட்டனர்
இத்தனையையும் அவள் பொருட்
படுத்தவில்லை; டிராக்டரைப்பிடித்து
உழுவது, தன்கடமையெனச் செய்
தாள்!

எத்தனைநாளைக்குத்தான் கேலி
யுங்கிண்டலும் நீடிக்கமுடியும்? நாள்
செல்ல செல்ல, கூட்டுப்பண்ணையின்
மூலம் இலாபம் அதிகமாகக்கிடைக்
கும் என்ற உண்மை வெளிப்பட்ட
தும் பலர் தாங்களாகவே, கூட்டுப்
பண்ணைகளில் சேர்ந்து, டிராக்டர்
டிரைவர்களாக ஆரம்பித்தனர். கூட்
டுப்பண்ணையின் வளர்ச்சி அதிக
மாகியதே தவிர, ஆங்கெலினுமீது
ஏற்பட்ட அவநம்பிக்கை கொஞ்சங்
கூட மறையவில்லை, அவள் சகாக்
களுக்கு.

ஒவ்வொருநாளும், காலையில்
எழுந்து, டிராக்டரைத் துடைக்க,
அவள் செல்லும்போதெல்லாம்,
"என்ன இருந்தாலும் அவள் ஒரு
பெண்தானே, அவளால் என்னமுடி
யும்?" என்றுகூறிவந்த ஆண் டிராக்
டர் டிரைவர்கள் நாள் செல்ல செல்ல
'ஆங்கெலினு ஒரு அதிசயப் பெண்
அதனுல்தான் அவளால் முடிகிறது
இருந்தாலும் பெண்களுக்கும் இந்த
வேலைக்கும் பொருத்தமல்ல" என்று
கூற ஆரம்பித்தனர்.

இதைக்கேட்ட ஆங்கெலினுவுக்கு,
ஆத்திரம் ஒருபக்கமும், ஆவேசம்
ஒருபக்கமும் எழும்பிற்று.

"ஏன் பெண்களால் முடியாது"

"ஏன் அவர்கள் தகுதியில்லை"
என்றகேள்விகள் அவள் இதயத்தை
இடிக்க ஆரம்பித்தன. இதன் விளை
வாக பலபெண்களைக்கொண்ட "ஒரு
டிராக்டர் பிரிவையே" ஆரம்பிப்ப
தெனமுடிவு செய்தாள். அதன்படி,

தனது தோழியர்கள் சிலரை, ஒத்துக்கொள்ளச் செய்து அவர்களை இட்டுக்கொண்டு அதிகாரிகளிடம் சென்றாள். அதிகாரிகளோ, ஆங்கெலினாவின் எண்ணத்திற்குமாறாக இருந்தார்கள்! "யாவரும் டிராக்டர் ஓட்டப்போவதாகக்" கூறப்பட்டதும் அவர்களுக்கு நகைப்புத்தான் மலர்ந்ததாம்! பெண்களின்மீது 'அவ்வளவு' நம்பிக்கை!

"இவர்களை நம்பி எப்படி டிராக்டர்கள் தரமுடியும்?" என்றுகேள்வி உருவில், கையை விரித்தனர். இதைக்கண்ட, ஆங்கெலினாவுக்கோ ஆத்திரம் குமுறியது. 'எங்குமே அவநம்பிக்கையும், எங்களால் ஆகாது என்ற எண்ணமும்தானா?" என்ற ஆவேசம், அலைமோதியது. "கொடுங்கள். என்னை நம்பிகொடுங்கள்! எல்லாவற்றிற்கும் நான் பொறுப்பு" என்று கூறி இயந்திரக்கலப்பைகளை, பலத்த பிடிவாதத்திற்குப் பிறகு, பெற்றாள். பெற்றுத்திரும்பியபோது எழுந்த ஆவேசம், அந்தப் பெண்களையெல்லாம் தன்போன்ற டிராக்டர் ஓட்டிகளாகத்தயார் செய்தபின்தான் அடங்கியது ஆங்கெலினாவுக்கு.

ஒருபக்கம் குலாக்குகள் கொடுமை மற்றொரு முனையில் கூட்டுப்பண்ணை எதிர்ப்பாளர் கூச்சல்—இன்னொரு திசையில் பாமரர் எதிர்ப்பு. இத்தனையும் தாண்டினாலோ, கட்சித் தொண்டர்களின் 'கிண்டல்!'

இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கும் கவலைப்படாமல், எடுத்த லட்சியத்தில் வெற்றிபெற வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்ததால்தான் இன்று ரஷ்யாவில் லட்சக்கணக்கான பெண்கள் டிராக்டர் ஓட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அன்று, ஆவேசத்தில் உருவாக்கப்பட்ட 'பெண்மணிகள் டிராக்டர் பிரிவு'தான் இன்று இத்தகைய நிலை ஏற்படுவதற்கு காரணமாகும். காடாகக் கிடந்ததை நாடாக்கி, கரடுமுரடுகளைக் களைந்து, கண்கவரும் சோலையாகச் செய்து, தரிசாகக் கிடந்த நிலத்தை 'தங்கம்' விளையும் வயலாக்கிய ரஷ்ய வீரர்களின் அணிவகுப்பிலே, பெண்களுக்குப பெரும் பங்கு உண்டு, என்ற பெருமையைச் சம்பாதித்துத் தந்தவர் ஆங்கெலினா!

அவர் தயாரித்த பெண் டிரைவர்களின் புது வரிசை கிராமத்தில் நுழைந்ததுதான் தாமதம், ஆத்திரம் கொண்டகிராமப் பெண்மணிகள், புற்றீசல் போல வந்து சூழ்ந்து கொண்டனர். 'திரும்பிப் போ. எங்கள் நிலங்களில் பெண்கள் இறங்கவிடோம்' என்று எதிர்த்து, ஆர்ப்பாட்டம் செய்தனர். இதேபோல்தான் எங்கும் ஏற்பட்டது. இருந்தும், ஆங்கெலினா தளரவில்லை. எதிர்ப்புகள், அவள் வெற்றித் தோட்டத்துக்கு, எருக்களாயின.

'எப்படியும் இவளை ஒழித்துவிட வேண்டும்' என்ற திட்டமிட்ட குலாக்குகள், ஒரு நாள் ஆங்கெலினா வயல் நோக்கி சைகிளில் வந்துகொண்டிருந்த பொழுது, பின்னாலிருந்து வேகமாகக் குதிரை வண்டியை ஓட்டிவந்து மேல் ஏற்றி படுகாயம் உண்டாக்கினராம். இதுபோல இலட்சியப் பாதையிலே நடந்த அவளுக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் ஏராளம்! மறைந்து நின்று சுட்டனர் பலர். எப்படியும் தொலைத்துவிடுவது என்றனர் பலர். இவ்வளவு எதிர்ப்புக்களையும் தாங்கி, முன்னேற்றப் பாதையில் முதலடி வைத்த ஆங்கெலினா, புது வழி தந்த பெண் மட்டுமல்ல, புகுந்த வழியில் யாவரும் எதிர்பார்க்க முடியாத வெற்றியைத் தந்த வீராங்கனை. ஒன்றுக்கு பத்து மடங்காக, முன்னைவிட தானியம் விளைவிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர். நெருக்கடி ஏற்பட்டபோதெல்லாம், மக்கள் தொல்லையைத் தீர்ப்பதே மகத்தான பணியென்று கருதி இரவும் பகலும் 'உழைத்து உணவுப் பொருள்களை வழங்கிய உத்தமி.

* * *

ஆங்கெலினா — புரட்சிப் பூங்காவிலே பூத்த புது மலர்! 'விழி தூக்கி தேன் மலர்கள் அழைக்க, வசந்தம் விளையாடும் சுவையணைப்புக் காதல்' வேளையைக் காணக்கூடிய பருவத்திலே, கழனியின்மீது காதலை வைத்தார். ஆனந்தம், இயந்திரக் கலப்பையின் அசைவிலே எழுந்தது; இன்பம் பயிரின் விளைச்சலிலே முகிழ்த்தது, அவருக்கு! பேசிடும் ஓவியமாக ஆடி, ஓடி அகமகிழ்ந்து இருக்கவேண்டிய வாழ்வின் வசந்த காலத்தில், ரஷ்ய சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் முன்னேற்ற உலகுக்கு ஒரு பாடம்!

ஆங்கெலினா — இன்று அடைய முடியாத இடத்தை அடைந்துவிட்டார், பெற முடியாத பெருமையைப் பெற்றுவிட்டார். ஏழைகளாயிருந்தோரின் வயற்றிலே பிறந்து, ஏழ்மையிலேயே வளர்ந்து, அந்த ஏழ்மையையே விரட்டியடித்த வீராங்கனை அவர்.

அன்று அவர் ஏழை, குலாக்கிடம் கூலிக்கு வேலை செய்தவரின் பெண்; கொஞ்சங்கூட மட்டுமரியாதை தெரியாதவள்!'

இன்று அவர் ரஷ்ய சட்டசபையின் உறுப்பினர். எட்ட முடியாத இடமான சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளிலே ஒருவர்! மக்களின் பெருமதிப்பையும் அரசாங்கத்தின் விருதுகளையும் பெற்றவர்—ஆட்சிப் பொறுப்பில் பெரும் பங்கு ஏற்று நிற்பவர். எனினும், இன்று கூட, அவர் ஒரு டிராக்டர் டிரைவர்தான்.

அன்று அவர் பெயரைக் கேட்டாலே நாராசம் ஊற்றியது போலிருந்தது. இன்றோ, அவர் பெயரால் ஸ்டாலினோவில் ஒரு தெருவே இருக்கிறது; ஒரு கப்பல் கூட அவர் பெயரைத் தாங்கி நிற்கிறது.

ஆங்கெலினா—இந்தப் பெயரைக் கேட்டாலே காதைப் பொத்திக் கொள்வர் அந்த வட்டாரத்தினர். இன்று அந்த பெயரைக் கேட்டாலே ருஷயப் பெண்களுக்கு விசைஒடிந்த தேகத்திலும் வீரம் எழும்பும்!

அவர் — ருஷ்ய மக்களின் வளர்ச்சியினூடே வளர்ந்தவர். உழைப்பால் தன்னை உயர்த்திக் கொண்டவரல்ல; நாட்டு நிலையை உயர்த்தி அதன் மூலம் பெருமை பெற்றவர். வெற்றிக்காக அவர் வேட்டை ஆடவில்லை. ஆனால் அது, அவர் அடி பணிந்தது, அருந்திறமையைக்கண்டு.

அன்று, 1930-ல் 60,000 டிராக்டர் டிரைவர்களில் அவர் ஒருவர்தான் பெண். இன்றோ, கூட்டுப் பண்ணைகளின் தலைவர்களாக மட்டும் 200,000 பெண்மணிகள் இருக்கிறார்கள்—டிராக்டர் டிரைவர்களாக ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட பெண்கள் பணி புரிகின்றனர்!

பழமை தாண்டவமாடியபோது இருட்டாகத் தோன்றினார், அவர், ரஷ்ய மக்களுக்கு. இன்று அவர், அவர்களின் விடிவிளக்கு! வாழ்வு வழியைக் காட்டிய கலங்கரை விளக்கம்!!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.